Find us on facebook/tamilmirror   Follow us on tamilmirror   epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

SATURDAY, JUNE 4, 2022

சனிக்கிழமை ஜூன் 04, 2022 | ஒளி: 08 கதிர் 014 | பக்கம்:09 | நகரப்பதிப்பு★ | FREE



## வேகமாக பரவுகிறது டெங்கு காய்ச்சல்

### ஒரு வாரத்தில் 1,616 பேர் பாதிப்பு

நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற வானிலை காரணமாக, டெங்கு நோய் பரவல் அதிகரித்துள்ளதாகவும், கடந்த ஒரு வாரகாலத்தில் 1,616 பேர் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தேசிய டெங்கு நோய் ஒழிப்பு பிரிவு தெரிவித்துள்ளது. அத்துடன் இந்த ஆண்டில் முதல் ஐந்து மாதங்களில் மாத்திரம் 18,880 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அவர்களின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



மருந்து பொருட்கள் இறக்குமதிக்கு

## கொவிட் நிதியை பயன்படுத்துங்கள்

கொவிட் நிதியத்தில் உள்ள 1.8 பில்லியன் ரூபாயை, அத்தியாவசிய மருந்து பொருட்களின் இறக்குமதிக்கு பயன்படுத்த பெற்றுக் கொடுக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ஆலோசனை வழங்கியுள்ளார். கொவிட் தொற்று தற்போது கட்டுக்குள் உள்ளதால், அத்தியாவசிய மருந்து பொருட்களின் கொள்வனவுக்கு இந்தப் பணத்தைப் பயன்படுத்த முடியும் என ஜனாதிபதி தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

மல்வானை சொத்துக் குவிப்பு வழக்கில்

# பசில், திருக்குமார் விடுதலை

### குற்றச்சாட்டுக்களை நிரூபிக்க போதுமான சாட்சியங்கள் முன்வைக்கப்படவில்லை

மல்வானை சொத்துக் குவிப்பு வழக்கில் முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ மற்றும் முன்னாள் அமைச்சர் நிருபமா ராஜபக்ஷவின் கணவர் திருக்குமார் நடேசன் ஆகியோர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். குறித்த வழக்கு விசாரணை நேற்று (03) கம்பஹா மேல் நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இவ் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

தொடர்ச்சி P2







உணவுப் பஞ்சத்தை தவிர்க்க

## நகர்ப்புற விவசாயம் குறித்தும் சிந்திக்கிறோம்

### உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான சர்வதேச அமைப்புகளிடத்தில் பிரதமர் தெரிவிப்பு

நாட்டின் விவசாயத்துறை தற்போது எதிர்கொள்ளும் மிக முக்கியமான பிரச்சினை உரம் மற்றும் எரிபொருட்களின் பற்றாக்குறை ஆகும். உணவுப் பற்றாக்குறை தவிர்க்க நகர்ப்புற விவசாய முயற்சி குறித்தும் கவனம் செலுத்துவதாக உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான சர்வதேச அமைப்புகளிடத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

21இல் அதிகாரத்தை தக்கவைக்க

## ஜனாதிபதி தரப்பு தீவிரமாக ஆராய்வு

■ ஆர்.யசி

பிரதமர் மற்றும் அமைச்சரவையை எந்த நேரத்திலும் நீக்குவதற்கும், எந்த நேரத்திலும் எந்த அமைச்சையும் கைப்பற்றுவதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரம் இருக்க வேண்டும் என்ற திருத்தத்தை உத்தேச 21 ஆம் திருத்தத்தில் உள்வாங்குவது குறித்து ஜனாதிபதியின் தரப்பு கூடிய அக்கறை செலுத்தி வருவதாகவும், அது குறித்த சட்ட ஆலோசனைகளில் தீவிரமாக ஈடுபட்டு வருவதாகவும் தெரிய வருகின்றது.

தொடர்ச்சி P2

## கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருத்தல திருவிழா ஆரம்பம்





கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருத்தலத்தின் வருடாந்த திருவிழா கொடியேற்றத்துடன் நேற்று (03) ஆரம்பமானது. எதிர்வரும் 13ஆம் திகதி வருடாந்த திருவிழா நடைபெறும்.

(படம்: வருண)

## விலை மோசடி செய்வோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை

### அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகளை கட்டுப்படுத்த நடவடிக்கை



பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படாத வகையில் அனைத்து அத்தியாவசிய உணவுப் பொருட்களையும் போதுமான அளவு கையிருப்பில் வைத்திருக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பணிப்புரை விடுத்துள்ளார்.

தொடர்ச்சி P2

அரசுக்கு எதிராக


## மக்கள் போராட்டம் சட்டத்துக்கு அச்சுறுத்தல்

### வலுவான பாதுகாப்புக் கொள்கை அவசியம் என்கிறார் பாதுகாப்பு செயலாளர் கமால் குணரத்ன



தேசிய பாதுகாப்பை நோக்கிய தனது இலக்குகளை அடைவதை வரையறுப்பதற்கு, நாட்டின் பாதுகாப்பு எந்திரங்களை ஏற்றுக்கொள்ளவும்,

தொடர்ச்சி P2



## அடுத்த ஆறு மாதங்களில் 5,800 இலங்கையர்கள் கொரியாவுக்கு

அடுத்த ஆறு மாதங்களுக்குள் 5,800 இலங்கையர்களை கொரியாவுக்கு அனுப்பும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும், இம்மாத இறுதியில் இருந்து பணியாளர்கள் அனுப்பப்படுவார்கள் எனவும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

தெற்காசியாவில்

## முதல் இடத்தில் கொழும்புத் துறைமுகம்

### உலகில் சிறந்த 22 துறைமுகங்களிலும் உள்ளடக்கம்



உலக வங்கி மற்றும் ‘ஸ்டாண்டர்ட் அண்ட் புவர்ஸ்’ மார்க்கெட் இன்டலிஜென்ஸ் சர்வதேச நிறுவனத்தின் தரப்படுத்தலுக்கு அமைய இலங்கையின்

தொடர்ச்சி P2

## செவ்வாய்க்கிழமை வரையில் எரிவாயு இல்லை



நாட்டில் மீண்டும் சமையல் எரிவாயு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில், நேற்று (03) தொடக்கம் சமையல் எரிவாயு விநியோகத்தை நிறுத்தியுள்ளதாகவும், அடுத்த வாரம் செவ்வாய்க்கிழமையே மீண்டும் நாடளாவிய ரீதியில் எரிவாயுவை விநியோகிக்க

தொடர்ச்சி P2

நிறைவேற்று அதிகாரத்தை நீக்கினால்

## நாடு இரண்டாகப் பிளவுபடும்

### சுயாதீன பாராளுமன்ற அணியினர் தெரிவிப்பு

நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை நீக்க வேண்டும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை. ஆனால் உடனடியாக நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை நீக்கினால் நாடு இரண்டாக துண்டாடப்படும் எனவும், நாடு இன, மத ரீதியில் தனித்தனியாக பிளவுபடுவதற்கு

தொடர்ச்சி P2

## அதிகரிக்கிறது மின் கட்டணம்

### 15 சதவீதமாக தொலைத்தொடர்பு வரியும் கூடும்



நேற்று (03) நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் விதமாக புதிய மின்சார திருத்தக் கட்டணம் அமலாகியுள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. அரசாங்கத்தின் வரி அதிகரிப்புக்கு அமைவாக இவ்வாறு மின் கட்டணத்தில் திருத்தம் மேற்கொள்வதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## நாம் அன்றிலிருந்து ‘கோட்டா கோ ஹோம்’ தான்

### போராட்டக் கள அனைத்து கட்சி போராளிகள் குழுவிடம் மனோ கணேசன் தெரிவிப்பு



“தம்பி, இந்நாட்டில் ஜனாதிபதியாக, பிரதமராக நாம் துடிதுடிக்கவில்லை. அப்படி துடியாய் துடிக்கும் பெருங்கட்சிகளை ஒரு கூடையில் போடுங்கள். எம்மைப் போன்ற ஒடுக்கப்பட்ட மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் முற்போக்கு கட்சிகளை வேறு விதமாக பாருங்கள். இந்நாட்டில்

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## மருந்து பொருட்கள்...

சுகாதாரத்துறையில் உடனடியாக கவனம் செலுத்தப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பில் ஜனாதிபதி மாளிகையில் நேற்று (3) முற்பகல் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

உலக சந்தையில் மருந்துப் பொருட்களின் விலைகள் வேகமாக அதிகரித்து வருவதால், உள்நாட்டில் மருந்து உற்பத்தியை துரிதப்படுத்தி, தேவையான மூலப்பொருட்களை இந்திய கடன் உதவியின் கீழ் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

## ஜனாதிபதி...

21 ஆம் திருத்த சட்டமூலத்தின் மூலமாக நிறைவேற்று ஜனாதிபதிக்கான அதிகாரங்கள் குறைக்கப்பட்டு பாராளுமன்ற அதிகாரங்கள் பலப்படுத்தப்பட வேண்டும் என தெரிவிக்கப்படுகின்ற போதிலும், ஜனாதிபதி அமைச்சுப்பதவிகளை வகிக்க முடியாது என்பதை அங்கிகரிக்க கூடாது என ஜனாதிபதியின் தரப்பில் சட்டத்தரணிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். அவசரகால நிலைமைகள் மற்றும் அரசியல் நெருக்கடி நேரங்களில் ஜனாதிபதியின் அதிகாரங்கள் மூலமாகவே நிலைமைகளை கையாள முடியும் எனவும், ஆகவே அதனை கருத்தில்கொள்ள வேண்டும் எனவும் அவர்கள் நீதி அமைச்சரிடத்தில் சுட்டிக்காட்டியுள்ளதாக தெரிய வருகின்றது. இந்நிலையில், நிறைவேற்று அதிகாரம் தக்கவைக்கப்பட வேண்டும் என்பதில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஆதரவு இருப்பதுடன், நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவுடனான சந்திப்பின் போதும் இந்த விடயங்கள் குறித்து கலந்துரையாடியிருந்தனர். நிறைவேற்று அதிகாரத்தை முழுமையாக நீக்காது ஜனாதிபதிக்கான அதிகாரங்களை தக்கவைக்க வேண்டும் எனவும், கடந்த 2018இல் ஏற்பட்ட அரசியல் நெருக்கடி நிலைமைகளை கருத்தில் கொண்டு எதிர்கால தீர்மானங்களை எடுப்பதே சிறந்ததாகும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளனர். நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை முழுமையாக நீக்குவதில் பாதிப்புகள் இருப்பதாகவும் அது குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டும் எனவும் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவும் தெரிவித்துள்ள நிலையில், நேற்று இடம்பெற்ற கட்சி தலைவர்கள் கூட்டத்திலும் இது குறித்து ஆராயப்பட்டிருந்தது. இந்நிலையில் எதிர்வரும் திங்கட்கிழமை உத்தேச 21 ஆம் திருத்த சட்டமூலம் அமைச்சரவைக்கு முன்வைக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## அரசுக்கு எதிராக...

அதன் மக்கள் மற்றும் நலன்களைப் பாதுகாப்பதற்கும் செயல்திறன் மற்றும் பொறுப்புக்கூறல் ஆகிய இரண்டையும் உள்ளடக்கிய வலுவான பாதுகாப்புக் கொள்கை அவசியம் என பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன தெரிவித்துள்ளார். மேலும், சமீபத்தில் அரசிற்கெதிராக நாட்டில் ஏற்பட்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய சம்பவங்கள் சட்டத்திற்கு அச்சுறுத்தாலாக அமைவதை மறுக்க முடியாது என்றும் குறிப்பிட்டார்.

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் ‘இலங்கையின் பாதுகாப்புக் கொள்கை; கடந்த, நிகழ் மற்றும் எதிர்காலம்’ என்ற தொனிப்பொருளில் ஏற்பாடு செய்யப்பட்ட கருத்தரங்கில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜெனரல் குணரத்ன மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தேசிய பாதுகாப்பு சூழலானது பாதிக்கப்படக்கூடிய, நிச்சயமற்ற, சிக்கலான மற்றும் தெளிவற்ற தன்மை கொண்டது என்பதால், புவிசார் அரசியல் சூழல் மற்றும் பாதுகாப்பு சூழலை வகைப்படுத்தும் முக்கிய காரணிகளின் நிலையான மற்றும் தொடர்ச்சியான மதிப்பீடு மற்றும் பகுப்பாய்வு, பல வடிவங்களில் மற்றும் தரங்களில் வரும் சாத்தியமான அச்சுறுத்தலை மதிப்பிட அவசியப்படும் எனவும் வலியுறுத்தினார். மாறிவரும் பாதுகாப்பு சூழலுக்கு இடமளிக்கும் மற்றும் திறம்பட பதிலளிக்கும் ஒரு பாதுகாப்பு கலாச்சாரத்தை வளர்ப்பதற்கு, ஒரு வலுவான, தகவமைக்கக்கூடிய மற்றும் விரிவான பாதுகாப்புக் கொள்கை கட்டாயமாகக் கருதப்படுகிறது, என்றார்.

உள்நாட்டு மதத் தீவிரவாதத்தின் மீது தாக்கம் செலுத்தும் நாடுகடந்த தீவிரவாதம் குறித்து குறிப்பிட்டு பேசிய அவர், “பிரிவினைவாதத்தை கோரிய விடுதலைப்புலிகளுக்கு ஆதரவான வெளிநாட்டு சக்திகள் மற்றும் உள்நாட்டில் அதன் மறைமுக ஆதரவுக் குழுக்களால் கணிசமான அச்சுறுத்தல்கள் உண்டு என தெரிவித்தார். இலங்கை அரசாங்கத்திற்கு எதிரான அவர்களின் நடவடிக்கைகளின் பின்னணியில், அவர்கள் தொடர்ந்து வெளிநாட்டு அரசாங்கங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களிடமிருந்து குறிப்பிடத்தக்க உதவிகளைப் பெற முனைவது, சமீபத்திய மனித உரிமைகள் குற்றச்சாட்டுகளின் மூலம் தெளிவுபடுகிறது” என்றும் அவர் குறிப்பிட்டார்.

## நாடு இரண்டாக பிளவுபடும்

இடமளிக்க மாட்டோம் எனவும் சுயாதீன பாராளுமன்ற அணியினர் தெரிவித்துள்ளார்.

21 ஆம் திருத்த சட்டதின் ஊடாக நிறைவேற்று ஜனாதிபதி முறைமை முழுமையாக நீக்கப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டு வருகின்ற நிலையில் அது குறித்து தமது நிலைப்பாட்டை முன்வைக்கும் போது கருத்து தெரிவித்த அத்துரலியே ரத்தன தேரர், நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை படிப்படியாக நீக்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும், நாளை காலையில் ஒட்டுமொத்தமாக நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை நீக்க வேண்டும் என கூற முடியாது. தேர்தல் முறைமை, மாகாணசபை முறைமை என்பவற்றை கருத்தில் கொண்டு, அவற்றை அரசியல் அமைப்பில் எவ்வாறு உள்வாங்குவது என்பது குறித்து ஆராய்ந்தே நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை நீக்குவது குறித்த தீர்மானம் எடுக்க வேண்டும். உடனடியா நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை நீக்கினால் நாடு இரண்டாக பிளவுபடும். மாகாணசபை முறைமையின் கீழ் வேறு இராச்சியம் உருவாக்கப்படும். ஏதேனும் ஒரு காரணத்தை கூறி இந்த நாடு இன, மத ரீதியில் தனித்தனியாக பிளவுபடுவதற்கு நாம் இடமளிக்க மாட்டோம் எனவும் தேரர் தெரிவித்தார்.

இது குறித்து விமல் வீரவன்ச எம்.பி கூறுகையில், நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை நீக்கினால் உடனடியாக மக்கள் ஆணைக்கு செல்ல வேண்டும். நாட்டின் இன்றைய நிலைமையில் மக்களை தேர்தலுக்கு வற்புறுத்த முடியாது என்றார்.

# பசில், திருக்குமார் விடுதலை

தொம்பே, மள்வானை - மாபிட்டிகம பகுதியில், 64 மில்லியன் ரூபா பெறுமதியான 16 ஏக்கர் காணியை கொள்வனவு செய்தமை, அதில் 125 மில்லியன் ரூபாய் செலவில் அதி சொகுசு மாளிகை ஒன்றினை நிர்மாணித்ததன் ஊடாக அரச நிதி முறைகேடாக பயன்படுத்தப்பட்டதாக கூறி மூன்று குற்றச்சாட்டுக்களின் கீழ் முன்னாள் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷவுக்கும் , முன்னாள் அமைச்சர் நிருபமா ராஜபக்ஷவின் கணவர் திருக்குமார் நடேசனுக்கும் எதிராக தொடரப்பட்ட வழக்கிலிருந்து அவர்கள் நேற்று இவ்வாறு விடுதலை செய்யப்பட்டனர். இதற்கான தீர்ப்பை கம்பஹா மேல் நீதிமன்ற நீதிபதி நிமல் ரணவீர அறிவித்திருந்தார்.

மேலும், இவ்வழக்கில் தொடர்ந்து சாட்சி நெறிப்படுத்தலை முன்னெடுக்கப் போவதில்லை என சட்டமா அதிபர் திணைக்களம் கம்பஹா மேல் நீதிமன்றுக்கு கடந்த தவணையின் போது (கடந்த மார்ச் 25 ஆம் திகதி) அறிவித்திருந்தது. நேற்று வழக்கானது விசாரணைக்கு வந்த போது, பிரதிவாதிகளான பசில் ராஜபக்ஷ மற்றும் திருக்குமார் நடேசன் ஆகியோர் நீதிமன்றில் ஆஜராகியிருந்தனர். முறைப்பாட்டாளர் தரப்பு சாட்சி விசாரணைகளை நிறைவுறுத்திய நிலையில், பிரதிவாதிகளின் சட்டத்தரணிகள் முன் வைத்த கோரிக்கைக்கு அமைவாக, பிரதிவாதிகளுக்கு எதிரான சாட்சிகள் முன்வைக்கப்பட்டுள்ளனவா என ஆராய்ந்து வழக்கின் தீர்ப்பை அறிவிப்பதாக நீதிபதி நிமல் ரணவீர குறிப்பிட்டார்.

அதன்படி குற்றச்சாட்டுக்களை நிரூபிக்க போதுமான சாட்சியங்களை முறைப்பாட்டாளர் தரப்பினரால் நீதிமன்றுக்கு முன்வைக்கப்படவில்லை என தீர்மானித்த நீதிபதி பிரதிவாதிகளை, அவர்கள் தரப்பின் நியாயங்களை ஆராயாமலேயே குற்றச்சாட்டுக்களில் இருந்து விடுவித்து விடுதலை செய்வதாக அறிவித்திருந்தார்.

## விலை மோசடி செய்வோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை

பொருட்களுக்கு தட்டுப்பாடு இருப்பதாகக் காட்டி சில வர்த்தகர்கள் விலையை அதிகரிக்கச் செய்யும் திட்டமிட்ட முயற்சிகளை இதன் மூலம் தடுக்க முடியும் என ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

வணிகம், வர்த்தகம் மற்றும் உணவுப் பாதுகாப்பு ஆகிய துறைகள் எதிர்நோக்கும் சவால்களுக்கு விரைவான தீர்வுகளை காண்பது தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம் (02) பிற்பகல் கொழும்பு, கோட்டையிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்றபோதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்

மொத்த வியாபார சந்தைக்கு வினியோகிக்கப்படும் விவசாய விளைபொருட்களில் ஒரு பகுதியை நேரடியாக கிராம சந்தைக்கும் வழங்க வேண்டும். இதன் மூலம் போக்குவரத்துச் செலவு குறைவடைவதனால், கிராமப்புற நுகர்வோர் குறைந்த விலையில் பொருட்களை கொள்வனவு செய்வதற்கும், விவசாயிகள் அதிக விலையை பெற்றுக்கொள்ளவும் முடியும் என ஜனாதிபதி தெரிவித்தார்.

நிலவும் சூழ்நிலையைப் பயன்படுத்தி நியாயமற்ற விலையில் வர்த்தகம் செய்பவர்கள் தொடர்பில் அவதானத்துடன் இருக்குமாறும், அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறும் நுகர்வோர் விவகார அதிகார சபைக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் இயங்கும் சதொச மற்றும் கூட்டுறவு விற்பனை நிலையங்களை தொடர்ந்து செயற்படுத்துவதன் அவசியம் பற்றியும், வர்த்தகர்களின் விருப்பத்திற்கு ஏற்ப விலை நிர்ணயம் செய்ய இடமளிக்காமல் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகளை கட்டுப்படுத்த வேண்டும் என்றும் இங்கு விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

## அதிகரிக்கின்றது மின் கட்டணம்

இதேவேளை, நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் தொலைத்தொடர்பு வரி அதிக்கப்படவுள்ளது.= அதற்கமைய தொலைத்தொடர்பு வரியானது, 11.25 சதவீதத்தில் இருந்து 15 சதவீதமாக அதிகரிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அடுத்த ஆறு மாதங்களில் 5,800 இலங்கையர்கள் கொரியாவுக்கு

கடந்த இரண்டு ஆண்டுகளில் நாட்டில் ஏற்பட்ட கொவிட் வைரஸ் பரவல் மற்றும் அரசியல் நெருக்கடி காரணமாகவும், தற்போது முகங்கொடுத்து வருகின்ற பொருளாதார நெருக்கடி காரணமாகவும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பாரிய அளவில் தடைப்பட்டுள்ளதாகவும், குறிப்பாக கொரிய வேலை தேடுபவர்களை கொரியாவுக்கு அனுப்புவதில் ஏற்பட்டுள்ள தாமதம் குறித்தும் தொடர்பில் கொரிய மனிதவளத் திணைக்களத்தின் பணிப்பாளர் மற்றும் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ஆகியோருடன் கலந்துரையாடியுள்ளதாகவும் தெரித்துள்ள அமைச்சர்,

அடுத்த ஆறு மாதங்களுக்குள், தகுதிவாய்ந்த 5,800 பணியாளர்களை கொரியாவிற்கு அனுப்ப இணக்கம் காணப்பட்டுள்ளதாகவும், இந்த மாத இறுதியில் முதற்கட்டமாக வாரத்திற்கு ஒரு விமானம் என்ற அடிப்படையில் கொரியாவிற்கு பணியாளர்கள் அனுப்பப்படுவதுடன் அடுத்த மாதத்தில் இருந்து வாரத்திற்கு இரண்டு விமானங்கள் இவ்வாறு கொரியாவிற்கு பயணிக்கும் விதமாக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## முதல் இடத்தில் கொழும்புத் துறைமுகம்

கொழும்பு துறைமுகம் உலகில் 22வது இடத்தையும் தெற்காசியாவில் முதல் இடத்தையும் பிடித்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது

கடந்த 2021 ஆம் ஆண்டில், கொழும்பு துறைமுகத்தில் 7.25 மில்லியன் இருபது அடிக்கு சமமான கொள்கலன்களை பரிமாற்றியுள்ளதாகவும், இந்த ஆண்டு மே மாதம் வரையில் இந்த எண்ணிக்கை இரண்டு வீதத்தினால் அதிகரித்துள்ளதாகவும் அவர்களின் கூட்டறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கிழக்கு, ஆழ்கடல் கொள்கலன் முனையம் நிர்மாணிக்கப்பட்டு வருவதாகவும், ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் மற்றும் அதானி போர்ட்ஸின் மூலமாக இந்த வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் இலங்கை துறைமுக அதிகார சபையின் தலைவர் பிரசாந்த ஜயமான்ன தெரிவித்துள்ளார்.

## செவ்வாய்க்கிழமை...

முடியும் எனவும் லிட்ரோ கேஸ் நிறுவனம் அறிவித்துள்ளது.

சமையல் எரிவாயு தட்டுப்பாட்டை அடுத்து எரிவாயுவை பெற்றுக்கொள்ள மக்கள் இரண்டு தினங்களாக வரிசையில் காத்திருக்க நேர்ந்துள்ளது. இந்நிலையில் கடந்த புதன்கிழமை எரிவாயுவுடன் இலங்கைக்கு வந்த கப்பலில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட எரிவாயு நேற்றுடன் முடிவுக்கு வந்துள்ள நிலையில், அடுத்த கப்பல் நாளைய தினம் இலங்கைக்கு வருவதாக லிட்ரோ கேஸ் நிறுவனம் அறிவித்துள்ளது. ஆகவே மீண்டும் அடுத்த வாரம் செவ்வாய்க்கிழமையே நாடளாவிய ரீதியில் எரிவாயு விநியோகிக்கப்படும் எனவும் அது வரையில் மக்கள் வரிசையில் நிற்பதை தவிர்த்துக்கொள்ளுமாறும் லிட்ரோ கேஸ் நிறுவனம் அறிவித்துள்ளது.

## வேகமாக பரவுகிறது டெங்கு காய்ச்சல்

கடந்த ஒரு வாரகாலமாக நாடளாவிய ரீதியில் பெய்துவரும் கனமழை காரணமாக 18 வலயங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும். வீடுகளில் மற்றும் பொது இடங்களில் நீர் தேங்கியிருக்கா வகையில் சுற்றுச்சூழலை பார்த்துக்கொள்ளுமாறும் தேசிய டெங்கு நோய் ஒழிப்பு பிரிவு பொது மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது .

## நகர்ப்புற விவசாயம் குறித்தும் சிந்திக்கிறோம்

இலங்கையின் நிகழ்கால உணவு நெருக்கடி நிலைமைகள் குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் உணவு மற்றும் விவசாய ஸ்தாபனத்தின் இலங்கைக்கான பிரதிநிதி விம்லேந்திர சரா, ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதி வதிவிடப் பிரதிநிதி மலின் ஹேர்விக் ஆகியோருக்கு இடையில் கலந்துரையாடல் ஒன்று நேற்று (3) முன்னெடுக்கப்பட்டிருந்தது.

நாட்டின் உணவு நெருக்கடியை தவிர்க்கும் விதமாக விவசாய திணைக்கள அதிகாரிகள் உணவு பாதுகாப்பு திட்டத்தை உருவாக்கி வருவதாகவும், நாட்டின் விவசாயத் துறை தற்போது எதிர்கொள்ளும் மிக முக்கியமான பிரச்சினை உரம் மற்றும் எரிபொருளின் பற்றாக்குறை காணப்படுவதாகவும் தெரிவித்துள்ள பிரதமர், உணவுப் பற்றாக்குறை ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகளை நிவர்த்தி செய்வதற்காக நகர்ப்புற விவசாய முயற்சி குறித்தும் கவனம் செலுத்துவதாக பிரதமர் தெரிவித்துள்ளார். மேலும் விவசாயத்துறையின் மற்றும் விவசாயிகளின் தேவையை உடனடியாக எம்மால் பூர்த்தி செய்ய முடியுமாயின் அடுத்த 5 தொடக்கம் 6 மாதங்களில் விவசாய நெருக்கடியை தவிர்க்க முடியும் எனவும் பிரதமர் கூறினார்.

இலங்கையின் நெருக்கடி நிலைமைகளில் தாம் ஒத்துழைப்புக்களை வழங்கி செயற்பட தயாராக இருப்பதாகவும், குறிப்பாக உரத் தட்டுப்பாட்டை சமாளிக்க விவசாய உதவித் திட்டத்தைத் தாங்கள் ஒன்றிணைத்து செயற்படுத்த தயராக இருப்பதாகவும் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர். அத்துடன் நாட்டின் நகர்ப்புற விவசாயத் திட்டத்திற்கு உதவ நன்கொடையாளர்கள் முன்வந்துள்ளதாகவும், இது வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டால், மேலும் நிதி உதவி வழங்கப்படும் எனவும், இலங்கையில் அமுல்படுத்தப்படக்கூடிய உணவு நெருக்கடிக்கான பதிலளிப்புத் திட்டத்தில் தாம் செயற்பட்டு வருவதாகவும் சர்வதேச பிரதிநிதிகள் பிரதமரிடத்தில் தெரிவித்துள்ளனர்.

## நாம் அன்றிலிருந்து ‘கோட்டா கோ ஹோம்” தான்

ஜனாதிபதியாக. பிரதமராக எமக்கு தகுதி இல்லாமல் இல்லை. அவை நிச்சயமாக எமக்கு இருக்கின்றன. ஆனால், நாம் பேரினவாதத்தால் ஒடுக்கப்பட்டுள்ள எமது மக்களை விடுவிக்கவே இன்று துடிக்கிறோம்” என தமிழ் முற்போக்கு கூட்டணியை சந்தித்த போராட்டக்கள அனைத்து கட்சி போராளிகள் குழுவிடம் மனோ கணேசன் எம்பி தெரிவித்தார்.

தமிழ் முற்போக்கு கூட்டணி- அனைத்து கட்சி போராளிகள் குழு சந்திப்பு, நேற்று கூட்டணி தலைவர் மனோ கணேசன் இல்லத்தில் நிகழ்ந்தது. தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதி தலைவர் பழனி திகாம்பரமும் இச்சந்திப்பில் கலந்துக்கொண்டார். இதுபற்றி மனோ எம்பி மேலும் கூறியதாவது,

தமிழர்களாகிய எங்களுக்கு உணவு இல்லை, மின்சாரம் இல்லை என்பவை பழகிப்போன பிரச்சினைகள். போர் காலத்தில் பல்லாண்டுகளாக தமிழ் மக்கள் இப்படி வாழ்ந்தார்கள். மலை நாட்டில் போர் இல்லாமலேயே நம் மக்கள் தோட்ட சிறைகளுக்குள் இப்படிதான் வாழ்கிறார்கள்

கலவர காலங்களில் எங்கள் வீடுகள் எரிக்கப்பட்டன. எம் மக்கள் கொல்லப்பட்டார்கள். ஆகவே இவை எமக்கு சகஜம். ஆகவே புதிய இலங்கையை உருவாக்குவோம். இவை அனைத்திற்கும் தீர்வு தேடுவோம். மாற்றத்தை கொண்டு வர சொல்லிவிட்டு, நீங்கள் ஓரமாய் ஒதுங்கி நிற்காதீர்கள். அந்த தேடலில் நீங்களும் நேரடியாக பங்களியுங்கள். அந்த தீர்வு உணவு, மின்சாரம், எரிவாயு ஆகியவற்றுக்கு அப்பால் இருக்க வேண்டும். மலையக தமிழ் மக்களில் மூன்றில் ஒரு பகுதியினர் தோட்டங்களில் பின்தங்கி வாழ்கின்றனர். அவர்களை தேசிய தளத்தில் உள்வாங்க அரசு இயந்திரத்தில் பெரும் தயக்கம் காணப்படுகிறது. அதை நாம் முறியடிப்போம். நீங்களும் உதவ வேண்டும் எனக் கூறியுள்ளார்.

கிளிநொச்சியில் அதிக விளைச்சல் என புள்ளிவிவரங்கள்:

# இழப்பீடுகள் இன்றி விவசாயிகள் அவலம்

சுப்பிரமணியம் பாஸ்கரன்






அதிக விளைச்சல் கிடைக்கப் பெற்றதாக புள்ளிவிவரங்களில் காட்டப்பட்டுள்ளதாகவும் இதனால் விவசாயிகளுக்கு கிடைக்க வேண்டிய இழப்பீடு கிடைக்காத நிலை காணப்படுகிறது.

வடமாகாண மக்களின் வாழ்வாதாரத்தொழில்களில் பிரதானமான ஒன்றாகக் காணப்படும் விவசாயச் செய்கைக்கு தேவையான யூரியா, கிருமிநாசினிகள், களை நாசினிகள் கிடைக்காமையால், விவசாயிகள் கடந்த மூன்று போகங்களிலும் நட்டத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் வாழும் மக்களில் 60 சதவீதத்துக்கு மேல் விவசாயத்தையே நம்பி வாழ்கின்றனர். இவ்வாறு விவசாயத்தை நம்பி வாழும் குடும்பங்கள், இன்றைய நிலையில் பெரும் பொருளாதார நெருக்கடிகளை எதிர் நோக்கி வருகின்றனர்.

கடந்த காலங்களில் வரட்சி, விளைபொருட்களை உரிய காலத்தில் உரிய விலைகளில் சந்தைப்படுத்த முடியாமை போன்ற பிரச்சினைகள் இருந்தாலும், தற்பொது எதிர்கொள்ளும் இவ்வாறான நெருக்கடிகளை எதிர்கொள்ளவில்லை.

ஏக்கர் ஒன்றுக்கு கடந்த போகங்களில் 35,000 ரூபாய் முதல் 40,000 ரூபாய் வரை செலவிடப்பட்டது. இப்போது எரிபொருள் விலையேற்றம், இரசாயன உரத்தட்டுப்பாடு மற்றும் விலை அதிகரிப்பு, கிருமி நாசினிகள், களை நாசினிகளுக்கான விலையேற்றம் என்பன காரணமாக, ஒரு இலட்சத்து 55ஆயிரம் ரூபாய் முதல் ஒரு இலட்சத்து 62 ஆயிரம் ரூபாய் வரை செலவிடவேண்டிய நிலைகாணப்படுகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் பெரும் போகத்தின் போது, நீர்ப்பாசனக் காணிகள், மானாவாரி பயிர்ச்செய்கை நிலங்கள் என 59 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் வருடாந்தம் நெல் உற்பத்தி மேற்கொள்ளப்படுகின்றது. கடந்த போகத்திலும் இவ்வாறாறே செய்கை மேற்கொள்ளப்பட்டது. ஆனால், மேற்படி உற்பத்தியில் கிளிநொச்சி மாவட்டத்தின் உணவுத்தேவைக்குரிய 22 ஆயிரத்து 310 மெற்றிக் தொன் நெல்லைக் கூட உற்பத்தி செய்யமுடியவில்லையென விவசாய அமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன.

பயிர்ச்செய்கையின் போது உரம், மருநதுப் பொருட்களுக்கான தட்டுப்பாடு, பயிர்ச்செய்கை நிலப்பண்படுத்தல், விதைநெல்லை பெற்றுக்கொள்ளல்




போன்ற பல்வேறு தேவைகளுக்கு, கடந்த போகங்களை விட இப்போது பலமடங்கு அதிகரித்த விலை காரணமாக, பெருந்தொகை முதலீடுகளை செய்யவேண்டிய நிலையில் விவசாயிகள் உள்ளனர்.

இன்றைய நிலையில், கிளிநொச்சி மாவட்டத்தில் இரணைமடு குளம் உள்ளிட்ட அனைத்து குளங்களிலும் 27 ஆயிரத்து 500 ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோக நெற் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதேபோல, 1,600 ஏக்கர் நிலப்பரப்பில் உப உணவுச் செய்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில், விவசாயிகளுக்கு தேவையான சேதன உரத்தை முழுமையாக வழங்குவதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும் பலரும் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

குறிப்பாக, சிறுபோக நெற் செய்கை மேற்கொள்ளப்பட்டு, 45 நாள்களுக்கு மேல்லாகி விட்டது. ஆனாலும், சேதன உரங்கள் முழுமையாக வழங்கப்படவில்லை. அதிகளவான விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

செய்கையை மேற்கொள்வதற்கு 10 நாள்களுக்கு முன்னரே, நிலத்தைப் பண்படுத்தும் போது பயன்படுத்தும் சேதன உரமானது, பயிர் செய்கை மேற்கொள்ளப்பட்டு 45 நாள்கள் ஆகியும் இதுவரை அவர்களுக்கு கிடைக்கவில்லை. இதனால் கூடுதலான விவசாயிகள் பயிர்செய்கை மேற்கொண்டு 45 நாள்களே கடந்துள்ள நிலையில் எந்த உரத்தையும் பயன் படுத்தாத நிலை காணப்படுகின்றது

கடந்த 31ஆம் திகதி மாவட்ட விவசாயிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாகவும் தங்களுக்கு விரைவாக உரத்தை பெற்றுத் தருமாறு கோரியும் இந்தியத் துணைத் தூதரை கிளிநொச்சி மாவட்ட விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள் சந்தித்தனர்.

இது ஒருபுறமிருக்க, கடந்த பெரும் போகத்தில், சேதனப் பசளையைப் பயன்படுத்தி பயிர் செய்கை மேற்கொண்டவர்கள் பாதிக்கப்பட்டிருப்பின் அவர்களுக்கான இழப்பீடுகளை, அரசாங்கம் வழங்கும் என்று அரசாங்கத்தால் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால், அதில் ஒரு விவசாயிக்கு கூட, அந்த இழப்பீடு இதுவரை கிடைக்கவில்லை என்பது இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. அதாவது, மாவட்ட புள்ளிவிவரவியல் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்பட்ட ஆய்வுகளின்படி, கிளிநொச்சி மாவட்டத்தில் அதிக விளைச்சல் கிடைக்கப் பெற்றதாக புள்ளிவிவரங்களில் காட்டப்பட்டுள்ள தாகவும், இதனால் விவசாயிகளுக்கு கிடைக்க வேண்டிய இழப்பீடு கிடைக்காத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அண்மையில் மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.





நிந்தவூரில் தொடர் கடலரிப்பில்

# மீனவர் கட்டடம் சேதம்; மீனவர்கள் தவிப்பு

பைஷல் இஸ்மாயில்

அண்மைய நாள்களாக நிந்தவூர் பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள தொடர் கடலரிப்பின் காரணமாக, கரையோரங்கள் பாதிக்கப்படுவதுடன், மீனவர்களின் வாடிகள், தென்னை மரங்கள், மீனவர்களின் பல்தேவைக் கட்டடங்களும் பாதிக்கப்பட்டு, நாளுக்கு நாள் கடலால் அள்ளுண்டு போவதைக் காணக்கூடியதாக உள்ளது.

இந்தத் தொடர் கடலரிப்பின் காரணமாக, மீனவர்கள் தங்கள் தொழிலை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதுடன், மீனவர்களின் மீன்பிடி சம்பந்தமான விடயங்களை கலந்தாலோசித்துக் கொள்வதற்கும், அவைகளை சிறந்த முறையில் நிர்வகித்துக் கொள்வதற்கும் பல தடங்கல்கள் ஏற்படுத்தப்பட்டு, தற்பொழுது அவர்கள் நடு வீதிக்கு வரும் துர்ப்பாக்கிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

கடந்த காலங்களில், இப்பிரதேசத்தில் தொடர் கடலரிப்பின் மூலமாக பல பாதிப்புகள் ஏற்பட்டிருந்த போதும், அரசியல்வாதிகள், அரச அலுவலகங்கள் மூலமாக சிறிது சிறிதாக நிவர்த்தி செய்யப்பட்டுக் கொண்டிருந்தது.

இவ்வாறு இருக்கும் நிலையில், நிந்தவூர் 9ம் பிரிவு பிர்தௌஸ் ஜும்ஆ பள்ளிவாசலுக்கு முன்பாகவுள்ள மீனவர்களுக்குச் சொந்தமான மீனவர் சங்கக் கட்டடம், தொடர் கடலரிப்புக் காரணமாக கடலால் காவு கொள்ளப்பட்டுள்ளது.

இந்தக் கட்டடமானது, சுனாமியின் பின்னர் வெளிநாட்டு தொண்டு நிறுவனம் ஒன்றால் வழங்கப்பட்டது. இங்கு மீனவர்கள், தங்களது மீனவர் சங்க செயற்பாடுகளை முன்னெடுத்து வந்ததுடன், அதன் பிறகு நிந்தவூர் ஒன்பதாம் பிரிவு சனசமூகநிலைய கட்டடமாகவும் இயங்கி வந்தது. இதில் மீனவர்களின் கூட்டங்கள், வேறு சங்கங்களின் கூட்டங்கள், இதர நிகழ்வுகள் என்பன நாள்தோறும் நடைபெற்று வந்ததுடன், இந்தக் கட்டடத்தின் மேல் மாடியில் இப்பகுதி மீனவர்களின் மீன்பிடி உபகரணங்கள் என்பன பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளது.

மேலும், இக்கட்டடத்தில் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பு தற்காலிகமாக பொலிஸ் நிலையம் இயங்கி வந்ததுடன், தற்போது மீனவர் தேவையுடன் கூடிய இப்பிரதேச சனசமூக நிலையமாகவும் இயங்கி வருகின்றது.

இந்நிலையில், கட்டடத்தின் ஒரு பகுதி மே 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஏற்பட்ட தொடர் கடலரிப்பின் காரணமாக, ஒரு பகுதி கடலால் இழுத்துச் செல்லப்பட்டுள்ளது. இன்னும் மீதமாக இருப்பது இந்த இரண்டு மாடிக் கட்டடத்தின் ஒரு பகுதி மட்டுமேயாகும். இதுவும் இன்னும் ஓரிரு வாரத்தில் கடலில் அள்ளுண்டு போகும் அபாய நிலையும் ஏற்பட்டுள்ளது.

இருந்தபோதும், கடந்த காலத்தில் இக்கட்டடம் அமைந்துள்ள பிரதேசத்தில் ஏற்பட்ட கடலரிப்பைத் தடுப்பதற்காக பாராளுமன்ற உறுப்பினர் பைசால் காசிமின் முயற்சியின் மூலம், கடலோர பாதுகாப்புத் திணைக்களத்தின் வழிகாட்டலுடன், தற்காலிகமாக மண்மூடைகள் நிரப்பப்பட்டு, பாதுகாக்கப்பட்டிருந்தாலும், கடல் அலைகளுக்கு அது தாக்குப்பிடிக்க முடியாமல் அள்ளுண்டு போனது.

ஆனால், இந்தப் பகுதியில் அமைந்துள்ள இந்தக் கட்டடத்தை நிரந்தரமாக பாதுகாப்பதற்கான எந்த நடவடிக்கைகளையும், நிந்தவூர் பிரதேச செயலகமோ, கரையோர பாதுகாப்பு திணைக்களமோ, இப்பிரதேச அரசியல்வாதிகளோ எடுக்கவில்லை.

இவ்வாறான நிலை தொடர்ந்து செல்லுமானால், கடைசியில் கடற்கரை வீதியினூடாக பயணம் செய்ய முடியாத துர்ப்பாக்கிய நிலையும் நிந்தவூர் பிரதேசத்துக்கு ஏற்படும் என மக்கள் அஞ்சுகின்றனர்.

ஒலுவில் துறைமுகம் நிர்மாணிக்கப்பட்டதன் பிறகு, நிந்தவூர் பிரதேசத்தில் காணப்படுகின்ற அதிகமான கரையோரப் பிரதேசங்கள் கடல் அலையால் காவு கொள்ளப்பட்டு, இந்த நிலங்கள் இருந்த அடையாளமே தெரியாமல் போய்விட்டன. இதிலே இப்பிரதேச மக்களின் தென்னந்தோப்புகள், மீனவர்களின் மீனவ வாடிகள் என இவைகள் நீண்டு கொண்டே செல்கிறது.

இருந்தபோதும், இந்தத் தொடர் கடலரிப்பால் நிந்தவூர் றவாஹா பள்ளிவாசலுக்கு முன்னால் அமையப்பெற்றுள்ள பிரதேசமும் கடலரிப்பினால் பாதிக்கப்பட, அன்றிருந்த பிரதேச செயலாளர் ரி.எம்.எம். அன்சாரின் முயற்சியின் விளைவாக, அதற்கு நிரந்தரமான தடுப்புச் சுவர்கள் அமைக்கப்பட்டு தற்போது அது பாதுகாக்கப்பட்டிருக்கின்றது. ஆனால், அடிக்கடி பல சிரமங்களை சந்திக்கும் நிந்தவூர் 9 ஆம் பிரிவு மீனவர்களுக்கு, நிரந்தர பாதுகாப்பு வசதிகளை இன்னும் நிந்தவூர் பிரதேச செயலகமோ, அரசியல்வாதிகளோ, கரையோர பாதுகாப்புத் திணைக்களமோ ஏற்படுத்திக் கொடுக்கவில்லை.

எனவே, நிந்தவூர் கடற்கரைப் பிரதேசத்தில் இருக்கும் வளங்களையாவது பாதுகாப்பதற்கு இவர்கள் அனைவரும் முன்வர வேண்டும் என்பதுடன், குறிப்பாக நிந்தவூர் ஒன்பதாம் பிரிவில் அமையப்பெற்றுள்ள இந்த மீனவர் சங்க கட்டடத்தைப் பாதுகாத்துத் தருமாறு இப்பிரதேச மீனவர்களும் பொதுமக்களும் அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

ஏழைகளின் நண்பன்

# பணக்காரன் வசமானான்

வி. சுகிர்தகுமார்

ஏழைகளின் நண்பன் எனச் சொல்லப்படும் ஆற்று செல்வமீனுக்கும் (மறு பெயர்கள்- கோல்டன், ஜப்பான், செப்பலி) இன்று அம்பாறை மாவட்டத்தில் அதிக கிராக்கி நிலவுகின்றது.

ஒரு கிலோ 200 தொடக்கம் 300 ரூபாய் வரையில் விற்பனை செய்யப்பட்ட காலம் கடந்து, இந்த மீனுக்கு தற்போது 800 தொடக்கம் 1,000 ரூபாய் வரையில் அதிகரித்துக் காணப்படுகின்றது.

ஒரு காலத்தில் வருமானம் குறைந்த மக்களால், அதிகமாக கொள்வனவு செய்யப்பட்டுவந்த இந்த ஆற்று மீனை, இன்று பணம் படைத்தவர்களே அதிகமாக கொள்வனவு செய்யத் தொடங்கியுள்ளனர்.

மீனை பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு, விலை அதன் சுவை, அதில் உள்ள ஊட்டச்சத்து காரணமாகவே இந்த நிலை தோன்றியுள்ளது.

சந்தைக்கு மீன் கொண்டுவரப்பட்டு, பல மணிநேரத்தின் பின்னர் விற்பனை செய்யப்பட்ட காலம் மலையேறி, மீன் சந்தைக்கு வருமுன்பே அதனை பெற்றுக்கொள்ள பல மணிநேரம் மக்கள் காத்திருக்கும் நிலை உருவாகியுள்ளது.

மீன் சந்தைக்கு கொண்டுவரப்பட்டதும், பணம் படைத்தவர்கள் முந்திக்கொண்டு விலையைப்பற்றி கவனத்தில் கொள்ளாது, கிலோ கணக்கில் அள்ளி செல்கின்றனர். இதேநேரம் வியாபாரிகளும் அவர்களுக்கே முன்னுரிமை அளிக்கின்றனர்.

இவ்வாறு, பணம் படைத்தவர்களிடம் இருந்து மிஞ்சினால் மாத்திரமே ஏனைய மக்கள் பெறக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக, இன்று வருமானம் குறைந்த மக்களே அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நிலை மற்றும் மீனுக்கான கேள்வி அதிகரித்தமையே விலையேற்றத்துக்குக் காரணமாகவுள்ளதாக பொதுமக்கள் நம்புகின்றனர்.

ஆயினும், விலை உயர்வுக்கு இன்னும் பல காரணிகள் தாக்கம் செலுத்தியுள்ளதை மீனவர்கள், வியாபாரிகள் மூலமாக அறிய முடிகின்றது.

வெளி மாவட்ட வியாபாரிகளின் வருகை, மீனவர்களின் கட்டுப்பாடின்றிய மீன்பிடி ஆக்கிரமிப்பு, ஆற்றைப் பயன்படுத்த அனுமதியளிக்கப்பட்டவர்கள் தவிர்ந்த பிற பிரதேச மீன்பிடியாளர்களின் ஊடுருவல், இவர்களை கட்டுப்படுத்தும் நிர்வாக முறைமையின்மை போன்ற பல காரணிகளும் இவ்விலையேற்றத்தில் தாக்கம் செலுத்தியுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

எது எவ்வாறானபோதிலும், நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகளைக் காரணம் காட்டி, ஆற்று செல்வமீனுக்கான விலையை வியாபாரிகள் அதிகரித்துள்ள நிலையில், இவ்விலை ஏற்றமானது மிகப்பெரிய அளவில் வருமானம் குறைந்த மக்களைப் பாதித்துள்ளது என்பது யதார்த்தமாக உள்ளது.

மீன்பிடியாளர்களும் விற்பனையாளர்களும் நாட்டு நிலைக்கேற்பவே நாங்கள் செயற்படுகின்றோம் எனச் சொன்னாலும், அது மனச்சாட்சியை மீறிய செயலாகவே, வருமானம் குறைந்த மக்களால் பார்க்கப்படுகின்றமை கசப்பான உண்மையாகவும் ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளது.

ஆகவே, இதற்குத் தீர்வு காணும் பொருட்டு பிரதேச செயலகம், பிரதேச சபை, மீன்பிடிச்சங்கம் உள்ளிட்டவர்கள் இணைந்து, பொருத்தமானதும் நியாயமான தீர்வைக் கண்டு, ஏழை மக்களை ஓரளவேனும் பாதுகாக்க முயற்சி மேற்கொள்வது காலத்தில் கட்டாயமானதாகும்; அதுவே மனிதாபிமானமும் நியாயபூர்வமானதும் ஆகும்.



கதிர்காம புனித பாத யாத்திரை

# 1,000 வருட பாரம்பரியம்

## நாம் அனுபவிக்க வேண்டியவை, எத்தனையோ உள்ளன என்பதை உணர்த்தும் யாத்திரை இது



விபுலமாமணி வி.ரி. சகாதேவராஜா









கொரோனா தீநுண்மியின் தாக்கம் காரணமாக, கடந்த இரண்டு வருடங்களாக தடைபட்டிருந்த பாரம்பரிய யாழ்ப்பாணம்-கதிர்காமத்துக்கான பாதயாத்திரை இவ் வருடத்தில் இன்று (4) சனிக்கிழமை ஆரம்பமாகிறது.

யாழ்ப்பாணம், செல்வச்சந்நிதி கோவிலில் இருந்து விசேட பூசை வழிபாடுகளுடன் பாரம்பரிய பாதயாத்திரை இன்று காலை ஆரம்பமாகிறது.

வரலாற்று பிரசித்தி பெற்ற ஸ்ரீ கதிர்காமம் கந்தன் ஆலய ஆடிவேல் விழா பேருற்சவம், ஜூலை மாதம் 28ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. 15 தினங்கள் திருவிழா நடைபெற்று, ஓகஸ்ட் மாதம் 11ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவடைய உள்ளது.

இதனை முன்னிட்டு ஜூலை மாதம் 20 திகதி, உகந்தை முருகன் கோவிலில் இருந்து கதிர்காம காட்டுப்பாதை திறக்கப்படுகிறது. உகந்தையில் இருந்து காட்டுக்குள்ளே குமண, குமுக்கன் ஆறு, வெட்டை, உப்பாறு, நாவலடி, வியாள, வள்ளியம்மன் ஆறு பாலம், கட்டகாமம், வீரச்சோலை வழியாக கதிர்காமத்தை அடைந்து, இறையருள் முழுமை பெறும் பயணம் நிறைவேறும்.

மனதுக்கு அமைதி தரும் பயணம். பல்லாயிரம் பேர் வாழ்க்கையில் தெய்வீக மாற்றத்தை முருக பெருமானே நேரடியாக வந்து வழிநடத்தும் பயணம்...

முருகப் பெருமானின் வழித்தடத்தை ஒற்றி, அகத்தியர், புலத்தியர், காசியப்ப முனிவர், கபில முனிவர், போகர், பாபாஜி, கோரக்கர், அருணகிரிநாதர், யோகர் சுவாமிகள் உட்பட பல சித்தர்களும் முனிவர்களும் யோகிகளும் ஞானிகளும் நடந்து வந்த பாதையில் எமது பாதங்களையும் பதித்து குமனை, யாளை, கட்டகாமம் ஆகிய காடுகளை கடந்து, ஆறு நாள்களாக பாத யாத்திரை சென்று கதிர்காம கந்தனை தரிசிகின்றனர்.

1,000 வருட பாரம்பரியம்மிக்க இந்தப் புனித பாத யாத்திரையானது, ஆன்மீக பயணம் என்பதையும் தாண்டி வாழ்க்கையில் ஒரு புதிய பரிமாணத்துக்கே நம்மை கூட்டிச் செல்கிறது.

இந்தக் கதிர்காம பாதயாத்திரை, தீராத இன்னல்களையும், சொல்லொணா துயரங்களையும் பாரிய பிரச்சினைகளையும் வேண்டுதல்கள் மூலம் தீர்க்கும் அற்புதமான களமாகும்.

தீராத நோய் நொடிகள் தீர அருள் வேண்டி, குழந்தை வரம் வேண்டி, திருமண வரன் வேண்டி, நிம்மதியான வாழ்க்கை வேண்டி, மன நிம்மதி வேண்டி, கல்வி வேண்டி, தொழில் வேண்டி, பதவி உயர்வு வேண்டி, செல்வம் வேண்டி, வீடு வேண்டி, வெளிநாட்டு பயணம் வேண்டி இப்படி எத்தனையோ வேண்டுதல்களை மனம் உருகி முருகப்பெருமானிடம் கேட்கும் களம் இது.

பக்தர்களின் பலவிதமான நேர்த்திக்கடன்களை நிறைவு செய்யும் பாதை இது.

தனது தீராத நோய் தீர்ந்த மகிழ்ச்சியுடன் வயோதிபர்கள், தனக்கு பல ஆண்டுகளின் பின் பிள்ளை வரம் கிடைத்த பெருமிதத்தில் கைக்குழந்தையுடன் தாய்மார்கள், தடைப்பட்ட திருமணம் நிறைவேறிய நிலையில் ஆனந்தத்துடன் இளம் தம்பதிகள், குடும்ப பிரச்சினைகள் தீர்ந்த மன நிம்மதியுடன் பெரியவர்கள், மகளைக் கரையேற்றிய பேரானந்தத்துடன் பெற்றோர்கள், பரீட்சையில் சித்தியடைந்த குதூகலத்துடன் மாணவர்கள், வெளிநாட்டுப் பயணம் கைகூடிய நிலையில், தொழில் கிடைத்த உற்சாகத்துடன் இளைஞர்கள் இப்படி எத்தனையோ விடயங்களைத் தாங்கி செல்லும் பாதை இது.

இவை மட்டுமா? ஆன்மீக பயணம், பக்தி வழிபாடு என்பதையும் தாண்டி இன்னும் பல விடயங்கள் இப்பாதயாத்திரையில் உள்ளன.

ஏழை, பணக்காரன், உயர்ந்தோர், தாழ்ந்தோர், படித்தவன், படிக்காதவன், தொழிலாளி, முதலாளி என்ற பேதமின்மை; ஏராளமான புதிய நண்பர்களின் அறிமுகம்; ஒன்றாக இருந்து உணவு உண்ணுதல்; அனைவருக்கும் பகிர்ந்தளித்து உண்ணுதல்; ஒருவருக்கு ஒருவர் உதவி செய்யும் மனப்பான்மை; உடல் சுகாதாரம், எளிமை, ஒற்றுமை, கூட்டுப் பிரார்த்தனை, பஜனை வழிபாடு என பல நன்மை பயக்கும் விடயங்களை இந்தப் பாதயாத்திரை நமக்குக் கொடுக்கிறது.

இவை மட்டுமல்ல! இன்னும் பலவற்றை நாம் பார்த்து, கேட்டு, இரசித்து, உணர்ந்து, அனுபவித்துச் செல்கிறோம். காடு, ஆறு, குளம், களப்பு, வெளி, மலை, சேறு, மணல், தென்றல், கூதல்காற்று, கச்சான்காற்று, மழை, சுட்டெரிக்கும் வெயில், பனி இப்படி இயற்கை நமக்களித்த கொடைகள் இந்தப் பாதையில் கொட்டிக் கிடக்கின்றன.

அழகிய மலைகள், வெளிகள், காடுகளைப் பார்த்து இரசித்து, காட்டு மூலிகைகளைத் தழுவி வரும் ஆறுகளில் குளித்து, சுத்தமான நல்ல காற்றை சுவாசித்து, மூலிகைகள் நிறைந்த காற்றை உடலில் படச் செய்து, புல் தரைகளிலே, ஆற்று மணலிலே, மரங்களின் கீழே படுத்து உறங்கி, காட்டிலே தேவாமிர்தமாகக் கிடைத்த உணவை அளவாக உண்டு மகிழ்ந்து, பறவைகளின் கீச்சொலிகளைக் கேட்டு, இறைவனின் நாமத்தை எந்நேரமும் உச்சரித்து, இந்த உணர்வுகளை எல்லாம் அனுபவித்து, அசைபோட்டு... அப்பப்பா! எத்தனை மனநிறைவான பயணம் இது!.

நாம் வாழும் சூழலில், நகரத்தில் எள்ளளவும் எண்ணிக் கூடப் பார்க்க முடியாத அத்தனையும் இந்தப் பாதயாத்திரை மூலம் நமக்குக் கிடைக்கிறது.

பணமும் பதவியும் புகழும் சுகமும் மட்டுமா வாழ்க்கை? அதை விட நாம் பெற வேண்டியவை எத்தனையோ உள்ளன என்பதை உணர்த்தும் யாத்திரை இது.

போலியாக, நிழலாக வாழும் எமக்கு உண்மையை, நிஜத்தைக் காட்டும் இந்தப் பாத யாத்திரையின் பேரானந்தத்தை அனுபவிக்க வேண்டுமென்றால் கதிர்காமத்துக்கு ஒரு முறையாவது பாதயாத்திரை செல்ல வேண்டும்.

மொத்தத்தில், ஒரே வார்த்தையில் சொன்னால் முருக பெருமானே நேரடியாக பயணத்தில் அனைவரையும் அழைத்து செல்கிறான். இது மட்டும் சத்தியம்....



கிழக்கு மாகாணத்தில் சுற்றுலா தளங்கள்

# இயற்கையின் கொடை

## 2021 – 2025 இடைக்கால அபிவிருத்தி திட்டத்துக்கு ஐ. நா அபிவிருத்தி நிதியம் பங்களிப்பு

ஹஸ்பர் ஏ ஹலீம்
ahhasfar@gmail.com









யுத்த காலப்பகுதியில் குறைந்த வளர்ச்சி நிலையில் காணப்பட்ட கிழக்கு மாகாண சுற்றுலாத்துறை, போருக்கு பிந்திய காலப் பகுதியில் நன்கு விருத்தியடைந்துள்ளது. சுற்றுலாத் துறையில் ஏற்பட்ட மறுமலர்ச்சியானது கிழக்கு மாகாணத்தில் 3,000க்கும் மேற்பட்ட நேரடி தொழில் வாய்ப்புகளையும் 5,000 க்கும் மேற்பட்ட மறைமுகமான தொழில் வாய்ப்புகளையும் ஏற்படுத்தியுள்ளது. 2020ஆம் ஆண்டு வரை ஒன்பது ஹோட்டல் திட்டங்கள் கிழக்கு மாகாணத்தில் அங்கிகரிக்கப்பட்டுள்ளன. இதன் மூலமாக 1,524 புதிய அறைகளைக் கொண்ட தங்குமிடங்கள், பிற அங்கிகரிக்கப்பட்ட விடுதி வசதிகளும் ஏற்படுத்தப்படவுள்ளன.

சுற்றுலாத் துறை சார் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குப் பொருத்தமான பல சாத்தியமான இடங்களை, இயற்கையாகவே கொண்டுள்ளமையானது கிழக்கு மாகாணத்துக்குக் கிடைத்த பெரும் கொடையாகும்.

கிழக்கு மாகாணத்தில் உயர்வளர்ச்சி வீதத்தில் அபிவிருத்தியடைந்து வந்த சுற்றுலாத் துறை, 2019ஆம் ஆண்டில் இருந்து பின்னடைவை சந்தித்த ஒரு துறையாகும். 2019இல் இடம்பெற்ற ஈஸ்டர் தாக்குதல் சம்பவம், கொவிட்-19 பெருந்தொற்று என்பவற்றைத் தொடர்ந்து, தற்போது எதிர்நோக்கியுள்ள பொருளாதார பிரச்சினைகள் சுற்றுலாத் துறையில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன.

கிழக்கு மாகாணத்தில் சுற்றுலா அபிவிருத்தி நடவடிக்கைகளை, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி சபையுடன் இணைந்து கிழக்கு மாகாண சுற்றுலாப் பணியகம் மேற்கொண்டு வருகின்றது. இதன் மூலம் கிழக்கு மாகாணத்தில் சுற்றுலா வளங்களின் உச்ச பயன்பாட்டினை பெறுவதன் ஊடாக, மாகாண பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிப்பினை வழங்குகிறது. மேலும், உள்ளூர் கிராம மக்கள் தொழில் வாய்ப்பைப் பெற்று தமது வாழ்க்கை தரத்தினை மேம்படுத்துவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படுகிறது

மேலும், கிழக்கு மாகாணத்தில் சுற்றுலாத் துறையுடன் தொடர்புடைய உள்ளூர் மற்றும் வெளிநாட்டு முதலீட்டு வாய்ப்புகளையும் மேம்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு ஒத்துழைப்பையும் ஆலோசனைகளையும் வழங்கி வருகின்றது.

சுற்றுலாத்துறை தொடர்பிலான, கிழக்கு மாகாண சுற்றுலா பணியகத்தின் பொது முகாமையாளர் டொக்டர் ராஜசேகரம் ஞானசேகர் உடனான உரையாடலை கேள்வி-பதில் வடிவில் இங்கே தருகின்றோம்.

**கேள்வி: கிழக்கு மாகாணத்தில் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில், சுற்றுலாத்துறை நிலைவரம் எவ்வாறு உள்ளது?**

பதில்: கிழக்கு மாகாண சுற்றுலாத்துறை, யுத்த சூழ்நிலை காரணமாக பாதிங்கப்பட்டிருந்தது. 2009 க்குப் பின்னர் அதீத வளர்ச்சி கண்டது. 2009இல் பதிவு செய்யப்பட்ட 206 அறைகளே காணப்பட்ட நிலையில் 2018 இல் ஆறு மடங்காக 1,300 அறைகளாக அதிகரித்தன. இதன் மூலமாக, நேரடி தொழில் வாய்ப்புகள் உருவாக்கப்பட்டன. 5,000க்கும் மேற்பட்ட தொழிற்துறை இதன் மூலமாக விருத்தி செய்யப்பட்டது.

சுற்றுலாத் துறையை விருத்தி செய்ய பல நிறுவனங்கள் ஊடான உதவிகள் கிடைக்கப்பெற்று திட்டங்களை மேற்கொண்டு வருகிறோம் அவுஸ்திரேலிய நாட்டின் 'skill for growth', ஜப்பானின் 'ஜெய்க்கா', உலக வங்கி ஊடான திட்டம், உள்ளூராட்சி மன்ற திட்டத்தை மேம்படுத்தும் LDSP, UNDP நிறுவனம் ஊடான அபிவிருத்திகளை இதன் மூலம் மேம்படுத்தப்பட்டு வந்த நிலையில் 2018 வரை 20 வீதமான வளர்ச்சியை கண்டு கொண்டது.



டொக்டர் ராஜசேகரம் ஞானசேகர்,
பொது முகாமையாளர்,
கிழக்கு மாகாண சுற்றுலா பணியகம்

சுற்றுலாவுக்கு மிகவும் பொருத்தமான காலமாக பெப்ரவரி தொடக்கம் ஒக்டோபர் வரையான மாதங்களே உள்ளன. ஏப்ரல் தொடக்கம் ஏற்பட்ட தற்போதைய நெருக்கடி நிலை மக்கள் போராட்டம் என்பன சுற்றுலாத் துறையை பாதித்துள்ளன. கிழக்கில் மாத்திரமல்ல நாட்டின் தேசிய ரீதியில் வீழ்ச்சியை சந்தித்துள்ளது. கிழக்கு மாகாணத்தை பொறுத்த மட்டில் நிதி சிக்கல் நிலையை தோற்றுவித்துள்ளதுடன் வெளிநாட்டு பயணிகளின் வருகையும் கணிசமான அளவு குறைவடைந்துள்ளது.

**கேள்வி: வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் கிழக்கு மாகாண வருகை, அந்நியச் செலவாணியில் எவ்வகையான தாக்கத்தை ஏற்படுத்துகிறது?**

பதில்: கிழக்கு மாகாணத்தை பொறுத்தமட்டில் உள்ளூர் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்து காணப்பட்டது. 2012க்கு பிறகு வெளிநாட்டவர்களின் வருகை உல்லாசத் துறையை வளர்ச்சிழயடையச் செய்தது. ஆனால், தற்போதைய அமைதியின்மை, சமூக ஊடகங்கள் ஊடாக காண்பிக்கப்படுவதால் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் வருகை வீழ்ச்சி கண்டுள்ளது, இதனால் இலங்கையின் அந்நியச் செலவாணியும் பாதிக்கப்பட்டு குறைந்த நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

**கேள்வி: கிழக்கு மாகாணத்தில் உள்ள சுற்றுலா துறை வளங்களை கொண்டு எதிர்கால அபிவிருத்தி தொடர்பிலான நிலைப்பாடு என்ன?**

பதில்: நாட்டில் உள்ள கடல் வளங்களில் 1/3 பகுதியை கிழக்கு மாகாணம் தன்னகத்தே கொண்டுள்ளது. இலங்கையில் 85 சதவீதமான கட்டுமானங்களை சுற்றுலாத் துறைக்காக ஏற்படுத்தப்பட்டுள்ளது. கடற்கரையை அண்மித்த உல்லாச துறை இங்கு பரந்துபட்ட அளவில் உள்ளது. கிழக்கில் நிலாவெளி, பாசிக்குடா, அருகம்பே கடற்கரை போன்றனவும் இங்கு பிரபல்யமாக மாறுபட்ட நிலையில் உள்ளதுடன் மரபு வழியில் உள்ள ஆலயங்கள் பௌத்த விகாரைகளும் காணப்படுகிறது. 25 வீதமான நீர் நிலைகள், உள்ளூர் சுற்றுலாத் துறையை பொறுத்த மட்டில் கிழக்கு மாகாணத்தில் உள்ளது.

இது தவிர வனப் பிரதேசங்களை உள்ளடக்கிய உல்லாசத் துறை காணப்படுகிறது. யானை, திமிங்கிலம் போன்றவற்றை கூட நேரடியாக பார்க்கக் கூடிய நிலைமை சுற்றுலாத் துறைக்கு பெரும் ஒத்துழைப்பாக விளங்குகிறது. மத்திய அரசின் நிதி ஊடாக இந்த துறையை விருத்தி செய்யப்படுகிறது. தற்போதைய நெருக்கடி நிலை காரணமாக இந்த நிதி நிலைமை கிடைக்கப் பெறுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. குறித்த சுற்றுலா துறை புதிய அமைச்சரின் வருகை ஊடாக மேலும் அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் காணப்படுவதாக அறியமுடிகிறது.

கிழக்கு மாகாணத்துக்கு வெளிநாட்டு பயணிகளில் ஐந்து சதவீதமானவர்களின் வருகை ஏற்படுத்தப்பட்டு உள்ளதையும் அறிய முடிகிறது. ஆனாலும் 85 சதவீதமான முறைசாரா சுற்றுலாத் துறை வர்த்தக நிலைமை காணப்படுகிறது. வீடுகளில், ஹோட்டல்களில் உல்லாசத்துறை சுற்றுலா வழிகாட்டுனர்கள் நிலைமை காணப்பட்டாலும், பதிவு செய்யப்படாமை அவர்களை பெரிதும் பாதித்துள்ளது. கொரோனா காலங்களின் போது தகுந்த பாதிப்புகான நட்ட ஈடுகளை பெற முடியாத நிலைக்கு முகங்கொடுத்துள்ளனர். கிழக்கில் 2009க்கு முன்பு சுற்றுலாத் துறை காணப்படவில்லை இதன் பின்பே வெளிநாட்டு பயணிகளின் வருகை அதிகரித்து துறைசார் வளர்ச்சி கண்டது

**கேள்வி: நாட்டில் ஏற்பட்ட நெருக்கடிக்கு முகங்கொடுத்து, உல்லாசப் பயணத் துறையை எவ்வாறு கட்டியெழுப்ப போகிறீர்கள்?**

பதில்: சகல துறைகளுடனும் இணைந்து கொண்டே சுற்றுலாத் துறையை வளர்ச்சி காண வேண்டிய நிலை உள்ளது. வன திணைக்களம், பொலிஸார், கடலோர பாதுகாப்பு நிறுவனம் போன்றவற்றுடன் இணைந்தே செயற்பட வேண்டியுள்ளது. 2021 - 2025ஆம் ஆண்டுக்கான இடைக்கால அபிவிருத்தி திட்டத்தை கிழக்கு மாகாண சபை தயாரித்துள்ளது. இதற்காக ஐக்கிய நாடு அபிவிருத்தி நிதியம் பங்களிப்பு செய்யவுள்ளது.

இதன் மூலமும் சுற்றுலாத் துறையை துறைசார் வளர்ச்சிக்கு கொண்டு செல்ல அவர்களுக்கான மீள் புத்துருவாக்க பயிற்சி, கடன் திட்டம் போன்றன பல கொள்கைகளை வகுத்து, திறம்பட முன்னேற்றமடையச் செய்யலாம். குறித்த இத் துறையில் ஈடுபடுவோர் மீது, உள்ளூராட்சி மன்றம் ஊடான வரிகளை கொடுக்க வேண்டிய நிலை உள்ளது. இதற்கான சரியான தீர்வை எதிர்காலத்தில் விருத்திக்கு கொண்டு செல்ல நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம்.



கலாநிதி
அரவிந்த கோரள



கடன் குழியிலிருந்து இலங்கையை மீட்பதற்கான

# சில ஆலோசனைகள்

(கடந்தவாரத் தொடர்ச்சி)

மேற்குலக நாடுகள், தங்களது பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்காக, நமக்குச் சொல்வது என்னவெனில், “நாங்கள் செய்ததை, நீங்கள் செய்ய வேண்டாம்; நாங்கள் சொல்வதை நீங்கள் செய்யுங்கள்” என்பதாகும். Ha Joon Chang என்பவரது ‘Kicking away the ladder’ என்ற அற்புதமான புத்தகத்தை ஆர்வமுள்ள அனைவரும் வாசிக்க வேண்டும். அவரது பிரதான கருத்து, மேற்குலகம், தாங்கள் உலகப் பொருளாதார உச்சியை அடைவதற்கு ஏறிவந்த ஏணியை, உதைத்துத் தள்ளுகிறது என்பதாகும்.

இலங்கை போன்ற நாடுகள், தொடர்ச்சியாக மேற்குலக பொருட்களை பெற்றுக் கொள்கின்றன. பதிலுக்கு தேயிலை போன்றவையையே விற்பனை செய்கின்றன. பண நெருக்கடி ஏற்படும்போது, சர்வதேச நாணய நிதியத்திடம் சென்று உதவி கோருகின்றன. சர்வதேச நாணய நிதியம், பாதகமான அமைப்பு என்று நான் கூறவில்லை. ஆனால், அது தனது மேற்குலக நிறுவனங்களின் நன்மையையே நோக்காகக் கொண்டுள்ளது என்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டும். ஆதலால், சர்வதேச நாணய நிதியம் எங்களுக்குத் தரும் பொருளாதார அறிவுரைகள், எங்களுக்குப் பொருத்தமானதாக இருக்கும் என நாம் கற்பனை செய்ய முடியாது.

ரொட்டாம் பல்கலைக்கழக பொருளியல் துறை பேராசிரியர் ஹார்வார்ட் நிக்கலஸ் (காணொளியில் 3-35 நிமிடங்கள்), வளர்ந்து வரும் நாடுகளின் தொழிற்றுறையில், முன்னேற்றமடைந்த நாடுகளினதும் மற்றைய நாடுகளினதும் நடைமுறைக் கணக்கு மீதிகளை ஒப்பிடுகிறார்.

இலங்கை தனது தொழிற்றுறையை முன்னேற்றி, அதன்மூலம் நடைமுறை கணக்கு மீதியை நேர் மீதியாக மாற்றி, அதன்மூலம் கடன் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும்.

## 13. ஒப்பீட்டு அனுகூலமும் தொழில் மயமாக்கலும்.

இயற்கையாக நம்மிடமுள்ள அனுகூலங்களை மட்டுமே அடிப்படையாகக் கொண்டுதான், தொழில் மயமாக்கலை செய்ய வேண்டும் என்பதில்லை. உதாரணமாக, கடலும் சூரிய வெப்பமும் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது, இலங்கையில் தாராளமாக உள்ளன. ஆனால், அதைச் சுற்றியே நமது தொழில்மயமாக்கல் நிகழ வேண்டும் என்று அவசியமில்லை. சிங்கப்பூரின் தொழிற்றுறை வளர்ச்சியே, இதற்கு நல்ல உதாரணமாகும்.

இன்னும் இரண்டு உதாரணங்களை இது தொடர்பாக பார்ப்போம்.

பன்றி வளர்ப்பிலும், பன்றி இறைச்சி தயாரிப்பிலும் டென்மார்க் உலகின் முன்னணி நாடாகும். Economist சஞ்சிகையில் வெளியான Bringing home the bacon என்ற கட்டுரையில், இது விரிவாக விளக்கப்படுகிறது. இலங்கைக்கு இது ஒரு மிகப் பொருத்தமான எடுத்துக்காட்டாகும். டென்மார்க் அரசு, ஒரு தொகுதி நிறுவனங்களை உலகத்தரமான பன்றி இறைச்சி தயாரிப்பில் ஈடுபடுத்தியது. இது, டென்மார்க் நாட்டில் இலகுவான காரியமல்ல. ஏனெனில், அங்கு வேலைக்கான கூலி மிக அதிகம். நீங்கள் நினைக்கலாம், ஒப்பீட்டு அனுகூலத்தின் அடிப்படையில், வேலைக்கான கூலி குறைந்த அளவில் காணப்படும் நாடுகளுக்கே இத்தொழில் பொருத்தமானது என்று. ஆனால், இல்லை; ஓர் அதி நவீன தகவல் தொழில் நுட்பத்தின் மூலம் நடத்தப்படும் தொழிற்றுறையை, எந்த நாட்டிலும் செய்யலாம். இதிலிருந்து இலங்கை கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள் ஆவன:

1. அரசாங்கம் பல நிறுவனத் தொகுதிகளை உருவாக்கி வழிநடத்த வேண்டும். (எப்போதும் ஒரு தனிப்பட்ட நிறுவனம் ஒன்றுக்கு சலுகைகள் வழங்கக் கூடாது. ஒவ்வொரு கம்பெனியும் இப்போட்டியில் மிதப்பதா, தாழ்வதா என்பதை தாங்களே தீர்மானிக்கட்டும்)

2. நிறுவனங்களுக்கு தொழில் புதுமைகளை வழங்க வேண்டும். அளவற்ற தொழில் தர முன்னேற்றமே, உலக சந்தையில் போட்டியிட வழிகோலும்.

3. மேற்குலக நாடுகளின் சோதனையான அரசு தொழில் முயற்சிகளில் இருந்து விலகி இருக்க வேண்டும் என்பதை புறந்தள்ளுங்கள். ஏனெனில், மேற்குலக நாடுகள் இந்தப் போதனையை பின்பற்றாததால் தான் பொருளாதார முன்னேற்றத்தை அடைந்தனர்.

இரண்டாவது உதாரணம், சீனாவின் ஷென்சென் நகரம். இதுதான் உலகின் பிரதான உற்பத்தி தொழில் மையம். ஷென்சென் நகரின் சனத்தொகை 23 மில்லியன் ஆகும். சரியாக இலங்கையின் சனத்தொகை போன்றது. ஆனால், அதன் மொத்த உள்நாட்டு உற்பத்தி, இலங்கையை விட இரண்டரை மடங்கு அதிகமானது. சில மேற்கத்திய நாடுகள் ஷென்செனில் வேலைக்கான கூலி குறைவாக உள்ளதே அதன் சாதகமான தன்மை எனக் கருதுகின்றன. அது உண்மையல்ல. அங்கு சிறியது முதல் மத்தியதர மற்றும் மிகப்பெரிய உற்பத்தி நிறுவனங்களின் தொகுதிகள் காணப்படுகின்றன. இவை உற்பத்தியின் ஒவ்வொரு பகுதியிலும் சிறப்புத் தேர்ச்சி பெற்றவையாக உள்ளன. இதை எனது வியாபாரத்திலும் அவதானித்து உள்ளேன். எனது KAL நிறுவனத்தின் வியாபார அலுவல்களுக்காக 50 தடவைகளுக்கு மேலாக சீனாவுக்கு சென்று உள்ளேன். இதில் பலமுறை ஷென்சென் நகருக்கு சென்றுள்ளேன். KAL நிறுவனத்திற்கான ஓர் உற்பத்தி பங்காளர் அங்கு உள்ளார். அங்கு என்ன அதிசயம் என்றால், உற்பத்தியின் ஒவ்வோர் அங்கத்திலும் சிறப்புத் தேர்ச்சி பெற்ற நிபுணர்கள் உள்ளமை தான். உதாரணமாக, எனது தொழிலுக்கு EPP எனும் ஓர் உபகரணம் தேவை. அது ATM கருவிகளில் உட்பதிக்கப்படுகிறது. இதற்கு அதிநவீன தொழில்நுட்பம் மற்றும் பாதுகாப்பு அவசியமாகும். உலகில் இவ்வகை உபகரணங்களை உற்பத்தி செய்ய வல்ல நிறுவனங்கள் சிலவே உள்ளன. ஒரு நிறுவனம் கலிபோர்னியாவிலும் இன்னொன்று டென்மார்க்கிலும் இரண்டு நிறுவனங்கள் ஷென்சென் இலும் உள்ளன. இந்த மாதிரியான உபகரணம் ஒன்றை உற்பத்தி செய்வதற்கு உற்பத்தித் திறன் மட்டுமல்ல, தொடர்ச்சியாக அதற்குரிய துணை உபகரணங்களை வழங்கும் தன்மையும் மிக முக்கியம். ஷென்சென் இவை அனைத்தையும் சிறப்பாக செய்கிறது. கலிபோனியா மற்றும் டென்மார்க் கம்பெனிகளுக்கும் தேவை ஏற்படும்போது ஷென்சென் துணை உபகரணங்களை வழங்கக் கூடும் என்பதில் எனக்கு எதுவித வியப்பும் இல்லை.

இந்த ஒப்பிட்டு அனுகூலம், இலகுவில் இன்னொரு நாட்டில் பெறப்பட முடியாது. இது நிச்சயமாக குறைந்த கூலி இனால் வந்த ஒன்றல்ல. இதுவும் இயற்கையாக அமைந்த ஒப்பிட்டு அனுகூலம் ஒன்றின் அடிப்படையில் உருவானதல்ல. இந்த அனுகூலம், புதிய தொழில்நுட்பங்களையும் சிக்கலான தொழில் முயற்சிகளையும் உருவாக்கி நடத்தக்கூடிய நிறுவன தொகுதிகளின் கூட்டு முயற்சியாகும். இதற்கு அரசாங்கத்தின் பக்கபலமும் காரணமாகும்.

இங்கு நிறுவனங்கள் உருவாக்கப்படுகின்றன. அதுபோல் நிறுவனங்கள் அழிந்தும் போகின்றன. அரசாங்கம் நிறுவனங்கள் என்ன செய்ய வேண்டும் என்று சொல்வதில்லை. ஆனால், அரசாங்கம் நிறுவனங்களை ஊக்குவிக்கின்றது. இது இயங்கும் மனித முதலீடாகும் (Human capital in action).

> **வெளிநாட்டவர்களுக்கு இலங்கையில் சொத்துரிமை உறுதிப்படுத்துவதன் மூலம், நாம் பெறும் கடன்களுக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்துதல்**
>
> **அரசியல் தலையீடு இல்லாமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும். நிறுவனங்களின் இயக்கங்களில் அரசாங்கம் தலையிடக்கூடாது**

## 14. இலங்கை எவ்வாறு தொழில் மயமாக வேண்டும்? எவ்வாறான தொழிற்றுறை இலங்கைக்கு பொருந்தும்?

பல வழிகளில் நாங்கள் இதைத் தீர்மானிக்கலாம். ஏனெனில், உலகத்துக்கு பலவகையான பொருட்களும் சேவைகளும் தேவைப்படுகின்றன. உலக மொத்த உள்நாட்டு உற்பத்தி அண்ணளவாக 100 ட்ரில்லியன் அமெரிக்க டொலராகும். அவ்வாறானால், உலகம் 100 ட்ரில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான பொருட்களையும் சேவைகளையும் ஒவ்வொரு வருடமும் வாங்கும். எங்களுக்கு ஏகப்பட்ட தெரிவுகள் உள்ளன என்று புரிகிறதல்லவா?

உதாரணமாக, மோட்டார் வாகன உற்பத்தியை கருதுவோம். உலக சந்தைக்கு இலங்கையால் கார்களை தயாரித்து விற்க முடியுமா? இல்லை என்பதே உண்மை. கார் உற்பத்தி தொழில் துறையானது ‘டொயோட்டா’ போன்ற பெரிய நிறுவனங்களால் கட்டுப்படுத்தப்படுகிறது. எந்தவிதமான பின்னணியும் இல்லாமல் எம்மால் ‘டொயோட்டா’ போன்ற நிறுவனங்களுடன் போட்டியிட முடியாது. ஆனால், கார் உற்பத்தி தொழிற்றுறைக்கு ஒரு நீண்ட விநியோக சங்கிலி தேவைப்படுகிறது. தனது மோட்டார் வாகனங்களுக்குத் தேவையான அனைத்து உபகரணங்களையும் ‘டொயோட்டா’ நிறுவனம் தயாரிப்பதில்லை. ஆயிரத்துக்கும் மேற்பட்ட உபகரணங்கள் ‘டொயோட்டா’ போன்ற நிறுவனங்களுக்குத் தேவைப்படுகின்றன. இந்த நீண்ட விநியோக சங்கிலி, இலங்கை போன்ற நாடுகளுக்கு வரப்பிரசாதமாக அமையக்கூடியன.

சங்கிலியின் ஒரு சிறிய பகுதியை, எங்களால் வழங்க முடியும். ஏற்கெனவே, இலங்கையின் ஊடாகச் செல்லும் இவ்வாறான விநியோக சங்கிலிகளை ஆராய்ந்து, அதில் இலங்கைக்கு காணப்படும் அறிவு, திறன்களை அறிந்து கொள்வது முக்கியம்.

அரசாங்கம் உலக சந்தையில் பங்களிப்புச் செய்யும் இலங்கை நிறுவனங்களின் தகவல்களை சேகரிப்பது மிக அவசியம்.

விநியோக சங்கிலி ஒன்றின் குறிப்பிட்ட பகுதிக்கு பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கும் நிறுவனங்களை ஒரு தொகுதியாக்கி, அவற்றை தொழிற்றுறையில் முன்னேற்ற வேண்டும். அரசாங்கம், நிறுவனங்களை ஆராய்ச்சி - அபிவிருத்தி (R&D), நிதி வழங்கல் என்பவற்றின் ஊடாக வலுவூட்ட வேண்டும். இவ்வாறு தான் ஷென்சென் முன்னேறியது.

## 15. அரசாங்கத்துக்கு தொழிற்றுறை கொள்கை தொடர்பான ஆலோசனைகள்

- இலங்கையர்கள் கவனம் செலுத்தக்கூடிய தொழிற்றுறைகளை இனங்காணல்.
- ஒரு தனிப்பட்ட நிறுவனத்துக்கு ஆதரவளிப்பது அல்லது முதலீடு செய்வது கூடாது.
- எப்போதும் நிறுவனங்களின் தொகுதிக்கு உதவி செய்ய வேண்டும்.
- தொழிற்றுறைகளை மேற்பார்வை செய்ய, சுயாதீனமான முகவர்களை உருவாக்க வேண்டும்.
- முகவர்களை உருவாக்கி, அவர்களுக்குரிய சட்டங்களை வகுத்த பின்னர், அவர்களை சுயாதீனமாக இயங்க விட வேண்டும்.
- மத்திய வங்கியை போன்று முகவர்களையும் சுயாதீனமாக இயங்க விட வேண்டும்.
- அரசியல் தலையீடு இல்லாமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும். நிறுவனங்களின் இயக்கங்களில் அரசாங்கம் தலையிடக்கூடாது.
- அரசாங்கம் பணத்தை அச்சிடும் போது, இந்நிறுவனங்களின் புதிய கண்டுபிடிப்புகளுக்காக அதைச் செலவு செய்ய வேண்டும்.

ஒரு போதும் ஒரு தனி நிறுவனத்தை பாதுகாக்கவோ, சலுகைகளை வழங்கவோ கூடாது. ஏனெனில் ஒரு நிறுவனத்தின் வீழ்ச்சியில் இன்னொரு சிறந்த நிறுவனம் உருவாகலாம். நிறுவனம் ஒன்றுக்கு உலக சந்தையில் போட்டியிட முடியாது போகுமாயின், அது தனது வளங்களை போட்டியிடக்கூடிய இன்னொரு நிறுவனத்துக்கு வழங்குவது சிறந்தது.

## 16. முடிவாக:

இது இலங்கை, தனது அந்நியச் செலாவணி பற்றாக்குறை பிரச்சினையிலிருந்து விடுபடுவதற்கான வழிமுறை வரைபாகும் (Blueprint).

நாங்கள் செய்ய வேண்டிய மூன்று செயல்கள் பின்வருமாறு:

1. வெளிநாட்டவர்களுக்கு இலங்கையில் சொத்துரிமை உறுதிப்படுத்துவதன் மூலம், வெளிநாடுகளில் நாம் பெறும் கடன்களுக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்துதல்.
2. தேவையேற்படின் இலங்கையின் சொத்துகளை விற்க ஆயத்தமாகுல்.
3. சுயாதீனமான முகவர்கள் ஊடாக தொழிற்றுறை நிறுவனங்களை மேற்பார்வை செய்து, தொழிற்றுறையை உலகதரத்துக்கு உயர்த்துவதன் மூலம், அந்நியச் செலாவணி பிரச்சினைக்குத் தீர்வு காணல்.

**இலங்கை மீண்டும் இந்து சமுத்திரத்தின் முத்தாக மிளிர வாழ்த்துகள்!**

மூலக் கட்டுரையை பார்ப்பதற்கு:
https://www.managing-debt-blueprint-for-sri-lanka.co.uk/

(கட்டுரை ஆசிரியர் தொடர்பாக: கலாநிதி அரவிந்த கோரள, ‘கோரள அசோசியேட்ஸ் லிமிடெட்’ (KAL) என்னும் உலகின் முன்னணி ATM மென்பொருள் உற்பத்தி நிறுவனத்தின் தலைமை பணிப்பாளர் ஆவர். இந்நிறுவனம் 1989ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. இதன் தலைமையகம் ஸ்கொட்லாந்து நாட்டில் உள்ளது. கடந்த 30 வருடங்களாக ATM மென்பொருள் தொழில்நுட்பத்தில் உலகில் முன்னணி நிறுவனங்களில் ஒன்றாக KAL திகழ்கின்றது. கலாநிதி. அரவிந்த கோரள, ஓர் இலங்கையர். அத்தோடு, வெளிநாடுகளில் வெற்றிகரமான தொழிற்றுறையை நடத்துபவர். ஆதலால், இலங்கையின் பொருளாதார பிரச்சினை தொடர்பாக, தனது வியாபார அறிவையும் அனுபவத்தையும் அடிப்படையாகக் கொண்டு இக்கட்டுரையை எழுதியுள்ளார். பெறுமதியான அவரது சிந்தனைகள், ஆலோசனைகள் தமிழ் வாசகர்களை சென்றடைய வேண்டும் என்பதற்காக, இக்கட்டுரை தமிழாக்கம் செய்யப்பட்டு இங்கு பிரசுரிக்கப்படுகிறது.)

தமிழாக்கம்: டொக்டர் வைதேகி ரஜீவன் பிரான்சிஸ்

# டெங்கை தடுப்பது சமூகத்தின் கூட்டுப்பொறுப்பாகும்

நாட்டில் மீண்டும் டெங்கு காய்ச்சல் பரவத் தொடங்கியுள்ளது. கொரோனா பெருந்தொற்று என்ற பேரிடரில் இருந்து மெதுமெதுவாக மீண்ட மக்கள், பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகளுக்கு அகப்பட்டு அல்லல்பட்டுக் கொண்டிருக்கின்ற காலப் பகுதியில், வேகம் கொண்ட டெங்கு பரவலும் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.

சுகாதார அமைச்சின் பிந்திய தரவுகளின்படி, இவ்வருடம் ஜனவரி முதல் இதுவரை சுமார் 19,000 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். கொழும்பு, கம்பஹா, களுத்துறை மாவட்டங்களில் அதிக நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டாலும், எல்லா மாவட்டங்களிலும் டெங்கு காய்ச்சலின் தாக்கம் இருக்கவே செய்கின்றது.

அந்த வகையில் 45 இற்கு மேற்பட்ட சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள் தொற்று அபாயமுள்ள பகுதிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன. நுளம்புகளால் காவிச் செல்லப்படும் நோய்களால், குறிப்பாக டெங்கு நோயால் கடந்த காலத்தில் நாம் எத்தனை உயிர்களை இழந்திருக்கின்றோம் என்பதை இன்னும் மறந்து விடவில்லை.

இன்று, இலங்கை மக்களாகிய நாம் மிகுந்த நெருக்கடிக்கும் மன உழைச்சலுக்கும் உள்ளாகியுள்ளதை மறுக்க முடியாது. வாழ்க்கைச் செலவும், அத்தியாவசிய பொருட்களுக்கான வரிசை யுகமும் நமது எதிர்காலம் பற்றிய அச்சமும் நம்மை ஆட்கொண்டுள்ளன.

இந்த நிலைமையால் நமது பிள்ளைகளின் பாதுகாப்பு, சுகாதார கரிசனைகள் என வழக்கமான விடயங்களில் கூட நம்மால் சரியாகக் கவனம் செலுத்த முடியாதுள்ளது என்பது நிதர்சனமானதே.

ஆயினும் இவற்றை எல்லாம் தாண்டி, நாம் கடந்தகாலங்களில் செயற்பட்டதைப் போல, அக்கறையுடனும் பொறுப்புடனும் செயற்பட வேண்டும்.

நுளம்பு பெருகக் கூடிய நீர்தேங்கி நிற்கும் இடங்கள், வீடுகளில் பயன்படுத்தப்படாத பாத்திரங்கள், சிரட்டைகள், ஜோக்கட் கப்கள், டயர்கள், பயன்படுத்தாத மீன் தொட்டிகள், கூரை பீலிகள் போன்ற எமது கவனத்தில் தென்படாத இடங்களில் இருந்துதான் டெங்கு நுளம்புகள் பரவுவதாக சுகாதார துறையினர் பல வருடங்களாக சொல்லிக் கொண்டிருக்கின்றனர். அதுவும் மழை விட்ட பிறகு, இதனது தாக்கம் உச்சம் தொட்டதை நாம் கடந்த காலத்தில் கண்கூடாகவே கண்டோம்.

இப்போது சாதாரண தரப் பரீட்சை முடிவடைந்துள்ளது. மாணவர்கள் வெள்ளம்புகுந்த வகுப்பறைகளில் கூட பரீட்சை எழுதியதை கண்டோம். அத்துடன் பாடசாலைச் சூழல்கள் மற்றும் பிரத்தியேக வகுப்பு நடைபெறும் இடங்கள் நுளம்பு பெருக ஏதுவானதாக காணப்படுகின்றன. இது குறித்து பெற்றோர் கவனம் செலுத்த வேண்டும்.

ஒவ்வொரு வீடுகளிலும் டெங்கு பரவ இடமளிக்காத வகையில் சூழலை சுத்தமாகப் பேணுவதை வழக்கமாகக் கொண்டிருந்தால், பிறகு நோய் வந்த பிறகு கைசேதப்பட வேண்டிய நிலை ஏற்படாது.

இங்கு இன்னுமொரு விடயத்தை சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. வீடுகளில் உள்ள நீர்த்தாங்கிகள், குளிர்சாதன பெட்டியின் நீர் தேங்கும் தொட்டிகள் வரை அலசும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள், நீர் தேங்கியுள்ள வடிகான்கள், பாழடைந்த காணிகள் தொடர்பிலும் சம்பந்தப்பட்டோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கத் தயங்கக் கூடாது.

இது கூட்டுப் பொறுப்பு. இதில் யார் தவறிழைத்தாலும் சமூகமே அதற்கான விலையை கொடுக்க நேரிடும்.




தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk


# மாற்றங்களில்லாத அரசியலமைப்பு

லக்ஸ்மன்

மாற்றம் ஒன்றே மாறாதது என்ற வார்த்தைக்கு அர்த்தத்தை தொடர்ச்சியாக நிரூபித்துக் கொண்டிருக்கின்ற இலங்கையின் அரசியலமைப்பு மாற்றங்களுக்கு, எப்போது முற்றுப்புள்ளி வைக்கப்படும் என்பதே இன்றும் என்றும் அனைவரது மனங்களிலும் இருக்கின்ற கேள்வியாகும்.

அரசியலமைப்புச் சட்டம் என்பது, ஒரு தன்னாட்சி உரிமை கொண்ட ஒரு அரசியல் அலகுக்கான, சட்ட விதிகள், கொள்கைகள் போன்றவற்றை விளக்கும் எழுத்துமூல ஆவணம் ஆகும். ஓர் அரசின் அமைப்பு அதன் உறுப்புகளிடையே செய்யப்பட்ட அதிகாரப்பகிர்வு அவற்றின் அதிகார எல்லை, அதை செயற்படுத்தவேண்டியமுறை, அரசாங்கத்தின் அமைப்பு அதன் உரிமைகள், இதற்கு மக்களிடமுள்ள கடமைகள், மக்களின் உரிமைகள் போன்ற யாவற்றையும் உள்ளடக்கியதாக அரசியலமைப்பு இருக்க வேண்டும்.

ஒவ்வொரு நாட்டிற்கும் அரசியலமைப்பு முக்கியமானது. ஏனெனில் அதுவே முழுமையாக ஓர் அரசினை செயற்படுத்தும் கருவியாக இருக்கும். ஒவ்வோர் அரசிற்கும் ஏற்றவகையில் நெகிழும், நெகிழா, ஒற்றையாட்சி, சமஷ்டி மற்றும் எழுதப்பட்ட எழுதப்படாத அரசியலமைப்புகளும் உண்டு. இலங்கையில் எழுதப்பட்ட நெகிழா ஒற்றையாட்சி அரசியலமைப்புதான் காணப்படுகிறது.

பிரித்தானியாவின் காலணியாதிக்க காலம் முதல் 1833, 1910, 1921, 1924, 1931, 1947களில் அரசியலமைப்பு சீர்திருத்தங்கள் ஏற்படுத்தப்பட்டன. 1948இல் இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்ததையடுத்து 1972இல் முதலாவது அரசியலமைப்பும் 1978ஆம் ஆண்டு இரண்டாவது குடியரசு அரசியலமைப்பும் உருவாக்கப்பட்டது. இரண்டாவது குடியரசு அரசியலமைப்பே நாட்டில் இப்போது நடைமுறையிலிருந்தாலும் பல்வேறு குறைபாடுகளையும் நெருக்கடிகளையும் கொண்ட அரசியலமைப்பாகவே காணப்படுகின்றது என்றே சொல்லவேண்டும். அதனை அவ்வளவு உறுதியாகக் கூறிக்கொள்ளமுடிவதற்குக் காரணம் அதில் ஏற்படுத்தப்பட்ட 20 திருத்தங்கள் மற்றும் இப்போது ஏற்படுத்தப்படவிருக்கின்ற 21ஆவது திருத்தமாகும்.

நீண்டகால அரசியல் திட்ட வளர்ச்சியைக் கொண்டிருந்தாலும் 1970க்குப் பின்னரே இலங்கை மக்கள் தமக்கான ஓர் அரசியலமைப்பை உருவாக்க முனைந்தனர். 1972ஆம் ஆண்டு சிறிமாவோ பண்டாரநாயக்காவின் தலைமையில் முதலாம் குடியரசு அரசியலமைப்பு உருவாக்கப்பட்டது. 1977ஆம் ஆண்டு தேர்தலில் வெற்றிபெற்ற ஜே.ஆர். ஜெயவர்தன தலைமையிலான அரசாங்கம் ஆட்சிக்கு வந்தவுடன் 1978ஆம் ஆண்டு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையையுடைய ஒற்றையாட்சி அரசியலமைப்பை உருவாக்கியது.

1947ஆம் ஆண்டு முதல் 1978ஆண்டு வரையான காலப்பகுதிக்குள் இரண்டுமுறை அரசியலமைப்பில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டது. 1978 இல் கொண்டுவரப்பட்ட அரசியலமைப்பானது 1978ஆம் ஆண்டு முதல் 2020 வரை 20 திருத்தங்களைக்கண்டது. எவ்வாறாயினும் இவ் அரசியல் அமைப்பு இப்போதும் பல்வேறு நெருக்கடிகளைக் கொண்டுள்ளதாகவே கொள்ளமுடியும். அதனாலேயே இலங்கையின் இரண்டாம் குடியரசு அரசியலமைப்பு நெருக்கடிகளைக் கொண்டுள்ளது என்று சொல்கிறோம். அந்த வகையில், சிறுபான்மை மக்களுக்கான உரிமைகளை மறுத்தல், இறைமை குன்றிய பாராளுமன்றம், வினைத்திறன் குறைந்த அமைச்சரவை, பெரும்பான்மை சமூகத்தின் மீதான அதீத கவனிப்பு போன்ற விடயங்கள் இலங்கையின் அரசியலமைப்பில் காணப்படுகின்ற குறைபாடுகளாகும்.

ஆனால், 2015 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்தின் பின்னர், இவ் அரசியலமைப்பினை மாற்றுவதற்கான யோசனைகள் முன்வைக்கப்பட்டு 19ஆவது திருத்தம் பாராளுமன்றம் அரசியலமைப்பு சபையாக மாற்றப்பட்டு, அதிகாரங்கள் வழங்கப்பட்டு, ஜனாதிபதியின் அதிகாரங்களும் குறைக்கப்பட்டன. அதேநேரத்தில் இரட்டைப் பிரஜாவுரிமையுள்ளவர்கள் தேர்தல்களில் போட்டியிட முடியாது என்ற மாற்றமும் செய்யப்பட்டிருந்தது. ஆனால், 2020ல் ஆட்சிக்கு வந்த புதிய அரசாங்கம் இச் சரத்துகளை மாற்றியமைத்து 20ஆவது திருத்தத்தினை கொண்டுவந்து மீண்டும் அதே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஏற்படுத்திக் கொண்டது.

இலங்கை அரசியலமைப்பின் முதலாவது திருத்தம் நீதிமன்ற நடவடிக்கை தொடர்பானதாக இருந்தது. 2வது மற்றும் 5வது திருத்தங்களானது, பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரை விலக்குதல் தொடர்பிலும் 3வது திருத்தம் ஜனாபதிபதியின் பதவிக்காலம் குறித்தும், 4ஆம் திருத்தம் பாராளுமன்றத்தினைக் கலைத்தல் தொடர்பாகவும் அமைந்துள்ளன. 6வது திருத்த முக்கியமாகப் பார்க்கப்படவேண்டியது. இதில் பிரிவினைவாதம் நாட்டுக்கெதிரான நடவடிக்கைகள் குறித்துக் குறிப்பிடுகின்றது. 7வது திருத்தத்தின் மூலம் கிளிநொச்சி மாவட்டமானது இலங்கையின் 11வது மாவட்டமாக உருவாக்கப்படுகிறது. 8வது அரசியலமைப்புத்திருத்தம் ஜனாதிபதி சட்டத்தரணிகளின் நியமனம் குறித்துக் குறிப்பிடுகின்றது. 9வது அரசியலமைப்புத் திருத்தம் பாராளுமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கமுடியாத சந்தர்ப்பம் குறித்தும் 10வது திருத்தம் பொது மக்கள் பாதுகாப்பு குறித்ததாகவும் அதேபோன்று 11வது திருத்தம் நீதித்துறை சார்ந்ததாகவும் அமைந்திருந்தன.

முக்கியமாக 13வது திருத்தமானது, இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் உந்துதலுடன் ஏற்படுத்தப்பட்டது. இதில் மாகாண சபை முறைமை உருவாக்கப்பட்டு 9 மாகாணங்களாக இலங்கை பிரிக்கப்பட்டது. இந்த அரசியலமைப்புத் திருத்தத்தின் முக்கியமான ஏற்பாடுகள், அது அறிமுகம் செய்யப்பட்டு 34 வருடங்கள் கடந்த பின்னரும் கூட இன்னமும் முறையாக அமல் செய்யப்படாதிருந்து வருகின்றன.

14வது திருத்தமானது பாராளுமன்ற உறுப்பினர்களுடைய எண்ணிக்கையை 225ஆக அதிகரித்தது. சட்டமூலங்களுக்கு மக்கள் கருத்தறிதல், தேர்தல் வலயங்கள் என பல விடயங்களை உள்ளடக்கியதாக இருந்தது. 16வது திருத்தமும் தேர்தல் தொடர்பான விடயங்களை உள்ளடக்கியதாகவே இருந்தது. 17வது திருத்தமானது மிக முக்கியமானதொன்றாகப் பார்ப்படவேண்டும். அதில் சிங்களமும் தமிழும் அரச கரும மொழிகளாக்கப்பட்டன. அத்துடன் 17வது திருத்தத்தின் மூலமாக அரசியலமைப்புப் பேரவை உருவாக்கப்பட்டது. இது இலங்கையின் வரலாற்றில் மிக முக்கியமானதொரு செயற்பாடாகும். இப் பேரவையில் பிரதம அமைச்சர், சபாநாயகர், பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர், ஜனாதிபதி மற்றும் பிரதமரால் நியமிக்கப்படுகின்ற ஐவர் அங்கம் வகிப்பர். அதே நேரத்தில் நிறைவேற்றுத்துறை, பகிரங்க சேவை குறித்த விடயங்கள் மாற்றத்துக்குள்ளானதுடன், தேர்தல் ஆணைக்குழு, நீதிச்சேவை ஆணைக்குழு, தேசிய பொலிஸ் ஆணைக்குழு போன்றன ஏற்படுத்தப்படுகிறது.

18ஆம் அரசியலமைப்பு சீர்திருத்தமானது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை மேலும் பலப்படுத்துவதாக அமைந்திருந்தது. அரசியலமைப்பின் 7ஆம் அத்தியாயம் ஜனாதிபதிக்கு பல்வேறு அதிகாரங்களையும் வழங்கி, அவரை தற்துணிவு உள்ளவராக மாற்றியுள்ளது. அந்தவகையில் இலங்கையின் ஜனாதிபதி நிறைவேற்றுத்துறையில் மாத்திரமன்றி நீதித்துறை மற்றும் சட்டத்துறை ஆகிய முத்துறைகளிலும் செல்வாக்கு செலுத்துபவராக இருக்கின்றார்.

சட்டத்தினை உருவாக்கும் ஸ்தாபனமாக பாராளுமன்றமானது காணப்பட்டாலும் அது இலங்கையில் சில குறைபாடுகளைக் கொண்டு பலவீனமாகக் காணப்பட்டது. அதாவது பாராளுமன்றத்தினை கூட்டுதல், கலைத்தல், ஒத்திவைத்தல் பாராளுமன்றத்தின் அதிகாரம் என்பவற்றில் ஜனாதிபதி ஆதிக்கம் செலுத்துவதுடன் பாராளுமன்ற தீர்மானங்களையும் மக்கள் தீர்ப்பு மூலம் ஜனாதிபதியால் மாற்றமுடியுமானதாக உள்ளது. எனினும் 19ம் சீர்திருத்தமானது பாராளுமன்றத்திற்கு ஜனாதிபதி பொறுப்புக் கூறுதல் வேண்டும் என்பது பாராளுமன்றத்தின் அதிகாரத்தில் பாதுகாப்பதாக ஏற்படுத்தப்பட்டு அரசியலமைப்பு சபையாக பாராளுமன்றம் மாற்றப்பட்டது. இருப்பினும் 20ஆவது திருத்தம் அதனை இல்லாமலாக்கியது.

1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பில் விகிதாசார தேர்தல் முறை இலங்கையில் உருவாக்கப்பட்டது. இது பல்வேறு குறைபாடுகளைக் கொண்டதாகக் காணப்படுகின்றது. இந்த நிலையில், முறையற்றதாகவும் சிறப்பாக நிறைவேற்றப்படாததாகவும் கொண்டுவரப்படுகின்ற மாற்றங்கள் திருத்தங்களால் இலங்கையின் அரசியலமைப்பினை நீடித்து நிலைத்திருக்கக்கூடியதாகவும் சிறப்பான பண்புகளைக் கொண்டதாகவும் முன்னுதாரணமான அரசியலமைப்பொன்றையே இந்நாட்டுக்காக உருவாக்கியாக வேண்டும்.

இவ்வாறான நெருக்கடிகளை தடுக்கும் முகமாக புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படுவதே ஒரே வழியாகும். அந்த அரசியலமைப்பு மக்கள் இறைமை பொருந்தியவர்களாகவும் அனைத்து மதங்களுக்கும் சம அந்தஸ்து உடையதாகவும் அடிப்படை உரிமைகள் சிறப்பானதாகவும் சிறந்த தேர்தல் முறையைக் கொண்டதாகவும் அதிகாரம் பகிரப்பட்டதாகவும் மற்றும் இலங்கைக்கு ஏற்ற நிறைவேற்று அதிகாரம் மிக்க ஜனாதிபதிமுறைமை இல்லாத, அடிப்படை உரிமைகள் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு அரசியலமைப்பாகவும் இருத்தல் அவசியமாகும்.

அந்தவகையில், புதிதாக ஏற்படுத்தப்படவிருக்கின்ற அரசியலமைப்பின் 21ஆவது திருத்தம் முக்கியமற்றதாக இருந்தாலும், அது பாராளுமன்ற உறுப்பினர்கள், பிரதமர், ஜனாதிபதி என அனைவரும் மக்கள் என்ற அடிப்படையில் பெறுப்புணர்வுடன் மேற்கொள்ளப்படவேண்டியதாகும். இதனை மனதில் கொண்டு ஒவ்வொருவரும் செயற்பட வேண்டும். புதியதொரு அரசியலமைப்பின் உருவாக்கத்துக்கு முயற்சிக்கவேண்டும். மாற்றங்களில்லா அரசியலமைப்பொன்றை நாம் உருவாக்கி நாட்டை முன்னோக்கி அழைத்துச் செல்ல வேண்டும் என்பதே அது!



## வாழ்வியல் தரிசனம்

விருப்பமின்றி வற்புறுத்தலுக்காகச் செய்யும் காரியம் முழுமை அடைவதில்லை. செய்யும் கருமத்தில் ஆர்வமும் தீட்சண்ய நோக்கமும் இருக்க வேண்டும்.

ஏனோதானோ எனச் செய்யும் வேலைகளில் தவறுகளே அதிகமாகும். வெறுப்புடன் எதைச் செய்தாலும், இயக்கங்கள் செயலற்று விடுகின்றன.

தொழில்புரிவது, எமக்கும் குடும்பத்துக்கும் எமக்குப் பிடித்தமானவர்களுக்கு மட்டுமல்ல; எமது பணி, இந்த உலகத்தினருக்குமான தொடர்பு உண்டு.

எந்தவொரு சேவையின் போதும், தனிஒரு மனிதன் மட்டும் அனுபவிக்க முடியாது. மறைமுகமாக சேவைகள் பகிரப்படுவதை, மக்களில் அநேகர் புரிந்து கொள்வதில்லை.

உலகில் சகல உயிரினங்களும் பிரசவிக்கப்படுகின்றன. இவற்றுள் மனிதரே பிரதானமான உயிரினம் என்றே பலர் கருதுகின்றனர். ஏதோ ஒரு காரணத்தின் பொருட்டு, ஏனைய உயிரினங்கள் பிறந்தாலும், அவற்றின் ஊடாகப் பல நன்மைகள் நடந்தேறிய வண்ணமே உள்ளன.

விலங்குகள், தாவரங்கள், கடல்வாழ் உயிரினங்கள் என்பன, உலகுக்கு ஆற்றும் பணி, சொல்ல முடியாத அளவு பரந்தவை. எனவே, மனிதராகிய நாம், பொறுப்புடன் காரியமாற்றுவோம்!

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### ஓட்டமாவடி பாலத்தடியில் துர்நாற்றம்

கோறளைப்பற்று மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட ஓட்டமாவடி பாலத்தை அண்மித்த பகுதியில், கடும் துர்நாற்றம் வீசுவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கொழும்பு - மட்டக்களப்பு பிரதான வீதியில், ஓட்டமாவடி ஆற்றோடு இணைந்த வகையில் காணப்படும் இயற்கை அழகு மிக்க குறித்த இடத்தில், கோழிகளின் கழிவுகள், குப்பைகள் என்பவற்றை சில பொறுப்பற்ற பிரகிருதிகள் மூடை மூடையாக வீசிச் செல்கின்றனர். இதனால் இப்பகுதி கடும் துர்நாற்றம் வீசும் இடமாக மாறியுள்ளதோடு, அப்பகுதியால் பயணிக்கும் பொதுமக்கள், மூக்கை பொத்திக் கொண்டு செல்கின்றனர்.

குறித்த பகுதியால் நாளாந்தம் பயணிக்கும் அனைவரும் பல்வேறு அசௌகரியங்களுடன் பயணம் செய்கின்றனர்.

எனவே, கோறளைப்பற்று மேற்கு பிரதேச சபை நிர்வாகம் இந்த இடத்தை துப்புரவு செய்து, இனிவரும் காலங்களில் அந்த இடத்தில் மிருகக் கழிவுகள், குப்பைகள் கொட்டுவதை தடைசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

எச்.எம்.எம். பர்ஸான்



# குரங்கம்மை







மட்டு. துஷாரா
thusharaff@gmail.com

கொரோனா பாதிப்பிலிருந்து உலக நாடுகள் படிப்படியாக மீண்டு வருகின்ற இந்நிலையில், தற்போது குரங்கம்மை தொற்று ஐரோப்பிய நாடுகளில் பரவத் தொடங்கியுள்ளது. நாளுக்கு நாள் இதன் பாதிப்பு அதிகரித்து வருவதால் உலகிலுள்ள மக்கள் அனைவரையும் அச்சுறுத்துகிறதா என்ற எண்ணத்தையும் தோற்றுவித்துள்ளது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக, உலகிலுள்ள நிறுவனங்கள் பகுதியாகவும் முழுமையாகவும் மூடப்பட்டதால் 330 கோடி மக்கள் வேலை இழந்துள்ளதாக ஐ.நாவின் ஆய்வு தெரிவிக்கின்றது. இதேவேளை, 50 கோடிக்கு மேற்பட்ட மக்கள் வறுமை நிலைக்கு ஆளாகுவார்கள் என பிரிட்டனை அடிப்படையாகக் கொண்ட தொண்டு நிறுவனமான 'ஒக்ஸ்பாம்' எச்சரித்திருந்தது.

முடங்கிய பொருளாதார நடவடிக்கைகள், தற்போது மீண்டும் முன்னேற்றம் அடைந்துவரும் இந்நிலையில், ஐரோப்பிய நாடுகளில் குரங்கம்மை நோய்த்தொற்று வேகமாகப் பரவி வருவது மக்களிடத்தில் பெரும் சவாலைத் தோற்றுவித்துள்ளது. இந்த வைரஸ்த்தொற்று ஆரம்பத்தில் ஆபிரிக்காவில் மாத்திரமே பரவியது. அங்கு ஆறு மாதங்களில் சுமார் 1,500 இற்கு மேற்பட்டவர்கள் இதன் தாக்கத்துக்கு உள்ளாகினர்.

இந்நிலையில், தற்போது பெல்ஜியம், பிரான்ஸ், ஜேர்மனி ஆகிய நாடுகளில் சிலருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டு பின்னர், அமெரிக்கா, அவுஸ்திரேலியா, கனடா, பிரித்தானியா, ஸ்பெயின், இத்தாலி, நெதர்லாந்து, போர்த்துகல், ஸ்வீடன் உள்ளிட்ட பல நாடுகளுக்கும் பரவியுள்ளது.

இதுவரை 24 நாடுகளில் பரவியுள்ள குரங்கம்மை தொற்றுநோய் காரணமாக, 400 இற்கு மேற்பட்டோர் நோய்த் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். இது குறித்து உலக நாடுகள் அவதானம் செலுத்த வேண்டும் என உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இளைஞர்கள், குழந்தைகளுக்கு இந்த வைரஸ் தாக்கும் அபாயம் அதிகமென வைத்திய நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். இந்நிலையில், குரங்கம்மை தொற்றுக்கு எதிரான தடுப்பூசி இன்னும் பயன்பாட்டில் இருப்பதாகவும், குரங்கம்மை நோய் தொடர்பாக நாட்டு மக்கள் தேவையற்ற பீதியடைத் தேவையில்லை என ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை, நோயெதிர்ப்பு மற்றும் உயிரணு உயிரியல் நிறுவனத்தின் பேராசிரியர் சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.

## தோற்றம்

குரங்கம்மை தொற்று ஓர் அரியவகை நோயாகும். ஆபிரிக்காவின் சில பகுதிகளில் விலங்குகளிடம் இருந்து மனிதர்களுக்கு இந்த நோய் பரவியது. 1958 ஆம் ஆண்டு, முதன் முதலில் ஆய்வகத்தில் உள்ள குரங்குகளிடமிருந்து கண்டுபிடிக்கப்பட்டதன் காரணத்தாலேயே இது 'குரங்கம்மை' என அழைக்கப்பட்டது. 1970ஆம் ஆண்டளவில் காங்கோ நாட்டில் முதன் முதலில் மனிதர்களில் கண்டுபிடிக்கப்பட்டது.

## அறிகுறிகள்

குரங்கம்மை தொற்று சின்னம்மையைப் போன்ற அரிய தொற்றுநோயாகும். ஆனால், சின்னம்மையைவிட அதன் தாக்கம் சற்றுக் குறைவாகக் காணப்படும். காய்ச்சல், தலைவலி, உடல்வலி, வீக்கம், முதுகுவலி, முகத்திலிருந்து தொடங்கி உடலுக்குப் பரவும் கொப்புளங்கள் போன்றவை இந்த நோயின் தொற்றுக்கான ஆரம்பகட்ட அறிகுறிகளாகும். காய்ச்சல் தொடங்கி மூன்று நாள்களுக்குள் முகத்தில் அரிப்பு ஏற்பட்டு பின்னர் கைகள், உள்ளங்கால்களுக்கு ஒவ்வாமை ஏற்பட்டு சிவப்பு நிறப்புள்ளிகள் தோன்றும். பின்னர் அவை கொப்புளங்களாக மாற்றமடைகின்றன.

இந்த நோய்த்தொற்று பொதுவாக இரண்டு முதல் நான்கு வாரங்களுக்கு நீடிக்கும். பின்னர் தானாகவே மறைந்துவிடும். குரங்கம்மைக்கு தனியானதொரு சிகிச்சை எதுவும் தற்போது இல்லை. இருப்பினும் பெரியம்மை தடுப்பூசிகள் இந்த வைரஸ் பரவுவதைத் தடுப்பதில் பெரிதும் பயனுள்ளவையாக நிரூபிக்கப்பட்டுள்ளன.

## பரவும் வழிகள்

குரங்கம்மையை ஏற்படுத்தும் வைரஸ், தோலின் மேற்புறத்தில் உள்ள உடைந்த உயிரிகள் மூலமாகவும், சுவாசக் குழாய் மூலமாகவும், கண், காது, மூக்கு பகுதிகளில் உள்ள மியூகோஸ் திசுக்கள் மூலமாகவும், குரங்கம்மைத் தொற்றால் பாதிக்கப்பட்ட விலங்குகளிடமிருந்தும், தொற்றால் பாதிக்கப்பட்ட விலங்களை தொடுவதன் மூலமும், அதன் உடல்திரவங்கள் மூலமும் பரவுகிறதாக விசேட பொது வைத்திய நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர்.

ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு எளிதில் பரவுவதில்லை. இருப்பினும் இந்த நோயால் பாதிக்கப்பட்டவர் உபயோகப்படுத்திய ஆடைகள், துண்டு ஆகியவற்றை உபயோகிப்பதன் மூலம் மற்றவர்களுக்குப் பரவும் வாய்ப்புள்ளது. அதேபோன்று இந்நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் இருமும் போதும், தும்மும் போதும் வெளியாகும் நீர்த்துளிகள் மற்றவர்கள் மீது படுவதன் மூலமும் அல்லது அதை சுவாசிப்பதன் மூலமும் இந்த நோய் பரவும் அபாயம் உள்ளது.

இந்தக் குரங்குக் காய்ச்சலால் ஓரினச் சேர்க்கையாளர்கள், இரு பாலின சேர்க்கையாளர்கள் அதிகளவில் பாதிக்கப்படுகின்றார்கள் என இங்கிலாந்து, ஸ்பெயின், போர்த்துக்கல், கனடா, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளின் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

கொரோனா வைரஸ் தொற்றுடன் ஒப்பிடும்போது இந்நோயின் பரவல் குறைவாகக் காணப்பட்டாலும், நெருங்கிய தொடர்பின் மூலம் இந்நோய் இலகுவாகப் பரவக்கூடியது. ஆனால் மெதுவாக இது சமூகப் பரவலாக மாறக்கூடிய அபாயம் உள்ளது. இதைக்கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## கண்டறியும் முறை

குரங்கம்மைத் தொற்றுக்குள்ளானவரின் உடம்பில் ஏற்பட்டுள்ள காயங்கள் அல்லது மாதிரிகள் எடுக்கப்பட்டு கொரோனாவை அடையாளம்காண பயன்படுத்தப்படும் பீ.சி.ஆர் பரிசோதனை மூலம் இந்நோயைக் கண்டறிய முடியும். குரங்கம்மைக்கென்று குறிப்பிட்ட சிகிச்சைகள் எதுவுமில்லை.

## பரவலை தடுக்கும் வழிமுறைகள்

தற்போது பல நாடுகளில் பரவிவரும் குரங்கம்மைத் தொற்றுநோய், இலங்கையில் பரவுவதை தடுக்கும் நோக்கில், அதுதொடர்பில் இலங்கை வைத்தியசாலை அமைப்பு வைத்தியர்களுக்கு தெளிவுபடுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும்.

குறிப்பாக, குரங்கம்மை காய்ச்சலால் பாதிக்கப்பட்ட வெளிநாட்டுப் பிரஜைகள், எமது நாட்டவர்கள் விமான நிலையம் ஊடாக நாட்டுக்குள் பிரவேசிக்க முயற்சிக்கும்போது, அவர்களை அடையாளம்காண விமான நிலையத்தில் அதற்கான வைத்திய பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டும். அவ்வாறு முன்னெடுக்கின்றபோது, விமான நிலையத்தில் குரங்கம்மை தொற்றின் அறிகுறிகளுடன் வருகின்றவர்களை கண்டறிய முடியும்.

இந்த நோய்ப் பரம்பலைக் கட்டுப்படுத்த விரைவான நடவடிக்கை தேவையாக இருக்கிறது. தடுப்பூசியும் முறையான சிகிச்சையும் இதற்கு ஒரே தீர்வு. பாதிக்கப்பட்டவர்களை கண்டுபிடித்து தனிமைப்படுத்துவதே இதன் பரவலை தடுப்பதற்கான முதற்கட்ட நடவடிக்கையாகும். இதன் மூலம், நாட்டுக்கு பரவவுள்ள இத்தொற்றைத் தடுக்க முடியும்.

மேற்குறிப்பிடப்பட்ட அறிகுறிகள் யாருக்காவது தென்பட்டால், தாமதியாது உடனடியாக வைத்திய சிகிச்சையை பெற்றுக்கொள்ளுமாறு தொற்றுநோய் பிரிவு பொதுமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது. தரமற்ற மருத்துவ சேவையை பெறும் 10 நபர்களில் ஒருவர், இந்த நோயால் இறக்க வாய்ப்புள்ளதாக உலக சுகாதார நிறுவனம் மேற்கொண்ட ஆராய்ச்சி முடிவுகளில் கண்டறியப்பட்டுள்ளது. இருப்பினும், இந்த நோயால் பாதிக்கப்படுபவர்கள் முறையான சிகிச்சையை மேற்கொண்டால் ஒரு சில வாரங்களில் குணமடைந்துவிடலாம்.


குரங்கம்மைத் தொற்றுக்குள்ளான எந்த நோயாளர்களும் எமது நாட்டில் இதுவரை இனங்காணப்படவில்லை என்பது மகிழ்ச்சியான செய்தியாக இருந்தாலும், இத்தொற்று நோய் பரவும் விடயத்தில் மிக அவதானமாக இருந்து கொள்வதுடன் அரசும், சுகாதாரத்துறையினரும் காட்டுகின்ற வழிகாட்டுதல்களுக்கமைய செயற்பட்டால் மாத்திரமே இந்நோயிலிருந்து எம்மையும் இளம் சமூகத்தினரையும் பாதுகாத்துக் கொள்ளலாம்.




# 'ஆயிஷா'க்கள், 'வித்தியா'க்களை வாழ வைப்போம்



ரஸீன் ரஸ்மின்
razeenrasmin87@gmail.com



'வீட்டில் தனிமையில் இருந்த சிறுமி துஷ்பிரயோகம்', 'துஷ்பிரயோகம் செய்த பின்னர் சிறுமி சடலமாக மீட்பு', 'தந்தையால் மகள் துஷ்பிரயோகம்', 'தாயின் இரண்டாவது கணவரால் சிறுமி துஷ்பிரயோகம்', 'துஷ்பிரயோகம் செய்யப்பட்ட மாணவியின் சடலம் மீட்பு' என்று அடிக்கடி செய்திகள் வந்துகொண்டே இருப்பதை அறிந்து கொண்டிருக்கின்றீர்கள்.

இலங்கையில் இது ஒரு கலாசாரமாக மாறியிருக்கிறது. அண்மையில், அட்டுளுகம பிரதேசத்தைச் சேர்ந்த பாத்திமா ஆயிஷா எனும் ஒன்பது வயது சிறுமி கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்ட சம்பவமும் இந்த நாட்டு மக்களை பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

இந்த நாட்டையே உலுக்கிய அட்டுளுகம பகுதியைச் சேர்ந்த சிறுமியின் கொலை தொடர்பில் அடிக்கடி சிறுமியின் வீட்டுக்கு வந்து போகும் 'ஐஸ்' போதைப்பொருள் நண்பர் ஒருவரே கைது செய்யப்பட்டு தற்பொழுது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

29 வயதுடைய அச்சந்தேகநபர் தானே இக்கொடூரமான கொலையைச் செய்ததாகவும் ஒப்புக் கொண்டுள்ளார். இந்த நாசகார செயலை செய்யும் போது தான் 'ஐஸ்' எனும் போதைப் பொருளை பாவித்திருந்ததாகவும் வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அட்டுளுகம ஆயிஷாவின் கொலை மாத்திரமல்ல, இது போன்ற பல 'ஆயிஷா'க்கள் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டு, பின்னர் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள்.

2016ஆம் ஆண்டு, கொட்டதெனியாவ ஆறு வயது சிறுமி சேயா செதெவ்மியை துஷ்பிரயோகம் செய்து கொலை செய்த குற்றத்துக்காக சமன் ஜயலத் என்பவர் குற்றவாளியாக இணங்காணப்பட்டதுடன் அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

அதேபோன்று திருகோணமலை, சம்பூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நீலாங்கேணிப் பகுதியில் 2021 செப்டெம்பர் மாதம் எட்டாம் திகதி ஆறு வயது சிறுமி கொலை செய்யப்பட்டு காட்டுப்பகுதியில் புதைக்கப்பட்டிருந்தார்.

2021ஆம் ஆண்டு, முல்லைத்தீவு, மூங்கிலாறு கிராமத்தை சேர்ந்த கர்ப்பமடைந்ததாக சந்தேகிக்கப்படும் 13 வயது சிறுமியின் மரணம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியது.

யாழ். புங்குடுதீவைச் சேர்ந்த 18 வயதான சிவலோகநாதன் வித்தியா சொந்த ஊரில் கூட்டு பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டார்.

2018 ஆம் ஆண்டு, சுழிபுரம் பிரதேசத்தில் சிறுமி, அப்பகுதி தோட்டக் கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டிருந்தார். பின்னர், மேற்கொள்ளப்பட்ட உடற்கூற்று பரிசோதனையில் சிறுமி, வாய் மூல பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாகியுள்ளதற்கான சான்றுகள் இருந்தமை தெரியவந்தது.

இவ்வாறு நாளுக்கு நாள் அதிகரித்து வரும் சிறுவர் துஷ்பிரயோகம், துன்புறுத்தல்கள், கொலைகள் என்பவற்றால், பெண் பிள்ளைகளை பெற்று வளர்ப்பது என்பது பெற்றோர்களுக்கு இப்போது பெரும் சவாலாக மாறியிருக்கிறது.

நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் எரிபொருள் கொள்வனவு செய்ய, எரிவாயுவை கொள்வனவு செய்ய வரிசையில் காத்து நிற்கும் பெற்றோர்கள் இன்று இளம் பெண் பிள்ளைகளை பாடசாலைக்கு, மாலை நேர வகுப்புகளுக்கு, கடைத் தெருவுக்கு அனுப்பி விட்டு அவர்கள் திரும்பி வரும் வரையும் வீதியில் காத்துக்கொண்டு நிற்கிறார்கள்.

அண்மைக்காலமாக, இலங்கையில் நடைபெற்ற சிறுவர் துஷ்பிரயோகங்கள், கொலைகள் என்பனவற்றை சற்று ஆராய்ந்து பார்க்கும் போது, போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்களே இவ்வாறான செயல்களில் ஈடுபட்டு வந்திருக்கிறார்கள் என்பது தெரியவந்துள்ளது.

மதுப் பழக்கத்துக்கு அடிமையான இளைஞர்கள், பாலியல் ரீதியான படங்களை பார்ப்பவர்கள் பின் விளைவுகளை பற்றி கொஞ்சம் கூட சிந்திக்காமல் செயற்படுகிறார்கள்.

'மதுவுக்குப் பின் மாது' என்கின்ற ஒரு கலாசாரத்தை நோக்கி இப்போது இளைஞர்கள் சென்றுகொண்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது.

போதை தலைக்கு ஏறியதும் பெற்ற பிள்ளையைக் கூட விட்டு வைக்க முடியாத அளவுக்கு சுய நினைவுகளை இழக்கச் செய்து, மனித மிருகங்களாக மாற்றி விடுகின்றனர்.

இந்த நாட்டை சரியாக நிர்வகிக்க முடியவில்லை என்று, இன்று வீதியில் இறங்கி ஆட்சியாளர்களுக்கு எதிராகப் போராடுகின்ற மக்கள், தமது ஊர்களில், இந்த நாட்டில் போதைப்பொருட்களை விற்பனை செய்பவர்கள், வாங்குபவர்களுக்கு எதிராக போராட்டங்களையும் நடத்த முன்வர வேண்டும்.

கோடிகளில், இலட்சங்களில் புரளுகின்ற இவர்கள், தமது பணத் தேவைகளுக்காக இளைஞர்களை இவ்வாறு கேட்டின்வழியில் அழைத்துச் செல்கிறார்கள்.

போதைப் பொருட்களை கடத்துகின்றவர்களுக்கு எதிராக குரல் எழுப்பினால் அல்லது அவர்களை பொலிஸாரிடம் காட்டிக் கொடுத்தால், அது அச்சுறுத்தலாக இருக்கும் என பொதுமக்கள் ஒருபோதும் நினைத்து விடக்கூடாது.

மக்கள் நினைத்தால் செய்ய முடியாதது எதுவுமில்லை என்பதை கடந்த காலங்களில் நிரூபித்துக் காட்டியதையும் இங்கு ஞாபகப்படுத்திக் கொள்வது தகும்.

இதற்காக சட்டத்தை கையில் எடுக்க வேண்டும் என்ற கருத்துப்பட சொல்லவில்லை. போதைப் பொருள் விற்பனை செய்பவர்களை, நீங்கள் அடையாளம் கண்டால், உடனடியாக பொலிஸாருக்கு தெரியப்படுத்துங்கள்.

உங்களது தகவலின் படி, சந்தேக நபர் கைது செய்யப்பட்டு தகுந்த தண்டனை விதிக்கப்படுவதன் மூலம் வேகமாகப் பரவிவரும் போதைப்பொருள் பாவனையை, ஓரளவு கட்டுப்படுத்ததுவதற்கு உதவுவதாக அமையும்.

உங்களால் கைது செய்யப்பட்ட சந்தேக நபர், பிணையில் வெளியில் விடுவிக்கப்படும் பட்சத்தில் அல்லது தண்டப்பணம் செலுத்திவிட்டு வரும் சந்தர்ப்பங்களில், அவர்களால் உங்களுக்கு ஏதும் அச்சுறுத்தல் விடுத்தால் அது தொடர்பில் மீண்டும் பொலிஸில் முறைப்பாடு செய்யுங்கள்.

முறைப்பாட்டாளர்கள் மற்றும் சாட்சியாளர்களை அச்சுறுத்தல் விடுக்கும் சந்தேக நபர் ஒருவர் மீண்டும் கைது செய்யப்பட்டால் அவருக்கு நீதிவான் நீதிமன்றத்தால் பிணை வழங்கப்படாது.

எனவே இந்த விடயத்தில் பொதுமக்கள் கவனம் செலுத்த வேண்டும். எங்களுக்கு ஏன் வேண்டாத வேலை என்று ஒவ்வொருவரும் நினைத்தால் இந்தப் பணியை யார் முன்னெடுப்பது.

பாலியல் துஷ்பிரயோகத்துக்குள்ளான சிறுமி கொலை என்ற செய்தியை கேட்டதும் கொதித்தெழுகின்ற நாம், சில நாள்களில் அதனை மறந்து விடுகின்றோம். இதனால்தான் வாழ வேண்டிய பல 'வித்தியா'க்கள், பல 'ஆயிஷா'க்கள் காமுகர்களின் பசிக்கு இரையாகிவிடுகிறார்கள்.

அதுமாத்திரமின்றி, பொலிஸார், பொது மக்கள் தொடர்பு செயற்பாட்டுத் திட்டத்தின் மூலம், நாடு தழுவிய நடவடிக்கைகளை மேற்கொண்டு, இவ்வாறான சமுதாயச் சீரழிவுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும். தவறினால் எமது தேசத்தினதும், சமுதாயத்தினதும் எதிர்காலம் பேரழிவுக்குள் தள்ளப்பட்டதாகவே அமைந்து விடும்.

எனவே, அற்ப சந்தோசத்துக்காக தங்கள் வாழ்கையை பணயம் வைக்கும் இளைய சமுதாயத்தினரிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தி, அவர்களை மீட்பது நம் அனைவரதும் கடைமையாகும்.

எனவே, நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து போதை பொருள் பாவனையில்லாத சமூகத்தை உருவாக்குவோம். 'ஆயிஷா'க்களை, 'வித்தியா'க்களை வாழ வைப்போம்.

வன்முறையற்ற அஹிம்சை ரீதியான சமூகத்தை உருவாக்கப் பிரார்த்தனை:

# “முடிந்தவரை நடப்போம்”

## இன அடையாளங்கள் அரசியல் செயல்முறையாகியதால் பிளவுகள்

ஏ.எச்.ஏ. ஹுஸைன்
husseinmedia000@gmail.com



பெரும்பாலும் பெண்களை உள்ளடக்கிய அந்த ஒரு சிறு குழுவினர், தினமும் தங்களது அஹிம்சை வழி நடைப் பயணத்தைத் தொடருகிறார்கள். சகல சமூக நண்பர்களாக ஒன்றிணைந்து, இந்த நடை பவனி முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

மட்டக்களப்பு, காந்திப் பூங்காவுக்குத் தினமும் வரும் அவர்கள், ‘அஹிம்சையின் மகான்’ எனப் போற்றப்பட்ட காந்தி சிலையின் அடியில் அமர்ந்து, சுடர் ஏற்றி சில நிமிடங்கள் அமைதியான முறையில் மௌனமாகப் பிரார்த்தி விட்டு, எழுந்து செல்கின்றனர். மௌனத்தினூடேதான் அவர்களது தொடர்பாடல் இடம்பெறுகிறது.

வன்முறையற்ற அஹிம்சை ரீதியான சமூகத்தை உருவாக்கப் பிரார்த்திக்கும் இந்தக் குழு, இப்பொழுது தமது நடைபவனியின் 25 நாளைக் கடக்கிறது.

காந்தி சிலை இருக்கும் சதுர வளாகத்தில், ஒரு பெரிய சேலையை கட்டியுள்ளார்கள். அதில் தமது அஹிம்சை வழிச் செயற்பாட்டுக் குழுவின் பல்வேறுபட்ட வேண்டுகோள்களை எழுதி வைத்துள்ளார்கள். அதேநேரம், தமது ஆடைகளிலும் அவயவங்களிலும் மரங்களிலும் கூட வாசகங்களை எழுதித் தொங்க விட்டுள்ளார்கள்.

உங்களது வேண்டுதல்கள் என்ன? ஏன் இந்தப் பிரார்த்தனை நடைபவனியை முன்னெடுக்கிறீர்கள் என்று கேட்டால், அந்தக் குழுவினர் வாய்மொழிப் பேச்சுகள் எதுவுமின்றி, தம்வசம் வைத்திருக்கும் ஒரு சிறு காகிதத் துண்டை நீட்டுகிறார்கள். அதேவேளை, அந்த நீண்ட நெடுஞ் சேலையில் எழுதித் தொங்க விடப்பட்டு உள்ளவற்றையும் குறிப்புணர்த்தி அதன் பக்கம் விரலை நீட்டுகிறார்கள்.

அந்தச் சிறு காகிதத்துண்டில் பின்வருமாறு எழுதப்பட்டுள்ளது:

அன்புடையீர்,

வாழ்வின் அடிப்படைத் தேவைகள் கேள்விக்கு உள்ளாக்கப்பட்டுள்ள இன்றைய நிலையில், எமது ஊரை, நாட்டை மீட்டெடுக்க அமைதியாகப் போராட வெளிவந்துள்ளோம்.

இன்று அமைதிக்காக, நீதிக்காக நாங்கள் நடக்கின்றோம்.

நம் அனைவருக்கும் பொருளாதார பாதுகாப்பு அத்தியாவசியமாகும்.

நம்பகமான, திடமான அரசாங்கம் எமது உரிமை.

பசியின்றி, பிணியின்றி, கல்வி, சுகாதாரம் என அடிப்படை தேவைகள் பூர்த்தி செய்யப்பட்ட நிம்மதியான வாழ்வே எம் அனைவருக்கும் தேவை.

நாங்கள் நீதிக்காக வீதியில் இறங்குவது, இது முதல்முறை அல்ல. யுத்தம், இடர், வன்முறை என்று வீட்டிலும் நாட்டிலும் ஏற்கெனவே நடந்த, இன்றும் நடந்துகொண்டிருக்கும், பல பிரச்சினைகளின்போது நீதிக்காக நாங்கள் வீதியில் இறங்கியுள்ளோம்.

இப்போராட்டம் நம் அனைவருக்குமானது.

வாருங்கள். சேருங்கள்.

ஊருக்காய், நாட்டுக்காய் வாருங்கள். நமது வருங்கால சந்ததியருக்காய் ஒன்று கூடுவோம்.

அமைதி காப்போம். போராடுவோம்.

வாழ்க மக்கள் போராட்டம்!

என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேவேளை, சேலையிலும் பதாதைகளிலும் எழுதப்பட்டுள்ளவற்றில் சில இவ்வாறு காணப்படுகின்றன.

ஊழல் அற்ற மக்கள் நலன்மீது அக்கறை கொண்ட தலைவர்கள் வேண்டும். ஜனநாயகம் வேண்டும் எங்களுடைய உரிமைகள் எங்களுக்கு வேண்டும். அதிகாரம் ஆதிக்கம் ஒடுக்குமுறை வன்முறை அற்ற வீட்டையும் சமூகத்தையும் நாட்டையும் உருவாக்க ஒன்றிணைவோம்.


வன்முறையற்ற மனித சமூகத்தை உருவாக்குவோம். அஹிம்சை வழியினில் எமக்கான நியாயத்தை நிலைநாட்டுவோம்.

இழப்புகளற்ற அமைதியான நம்பிக்கையான எதிர்காலம் எமக்கு வேண்டும்.

மாற்றத்திற்கான அமைதிப் பயணம். நியாயமான பூலோக மெங்கும் அன்பு பரவட்டும். பெண்களையும் சக மனிதர்களையும் இயற்கையையும் வன்முறைக்குட்படுத்தாத வாழ்வைத் தேடி அஹிம்சை வழிப் பயணம். அரசாங்கமே மக்களின் உணவு எங்கே? மக்களின் சுதந்திரம் எங்கே? என்ற கேள்வியையும் அவர்கள் எழுப்பியுள்ளார்கள்.










நல்லிணக்கத்தை ஒருபோதும் வன்முறைகளாலோ, வெறுப்புணர்வுகளாலோ பெற்றுவிட முடியாத அதேவேளை, அந்த நல்லிணக்கத்தை ஓரிரவில் அடைந்து விடவும் முடியாது; அது தனக்குள்ளிருந்து உருவாக வேண்டும்.

வன்முறையற்ற தொடர்பாடலினூடாக சமாதானத்தைக் கட்டியெழுப்புவது ஆக்கபூர்வமான விடயமாக இருந்தபோதிலும் அது பல சவால்கள் நிறைந்தது.

வன்முறையற்ற தொடர்பாடலை முதலில் தங்களுக்குள்ளிருந்தே ஆரம்பிக்க வேண்டும். அதுதான் மிகச் சிரமமான விடயமும் கூட. அப்படி நிரந்தரமான உள் அமைதியைக் கொண்டு வந்த பின்னர்தான் தமது குடும்பம், அயலவர்கள், பணியிடம், சமூகம் என்று புரிந்துணர்வும் இணக்கப்பாடும் அஹிம்சையும் விரிவடைய முடியும்.

பேச்சளவில், அல்லது பயிற்சி வகுப்புகளில் கலந்து கொண்டு சான்றிதழ்களைக் கொண்டு வன்முறையற்ற தொடர்பாடலையும் புரிந்துணர்வையும் இணக்கப்பாட்டையும் ஒருபோதும் ஏற்படுத்த முடியாது. அது செயற்பாட்டில் இருக்க வேண்டும். நீங்கள் முன்னுதாரணமாக இல்லாதவரை எந்தவொரு கருமத்தையும் போதனை செய்யவோ, அதனை எதிர்பார்க்கவோ முடியாது.

சிறிதொரு விடயமாக இருந்தாலும் கூட அது சிறந்ததாக இருக்க வேண்டும். அதன் மூலமே மாற்றத்தைக் கொண்டு வர முடியும். நல்லிணக்கமும் சமாதானமும் நினைத்த மாத்திரத்தில் வந்துவிடக் கூடியதல்ல. அது ஒரு நீண்டகாலச் செயற்பாடு அதனை ஏற்படுத்துவற்குக் காலமெடுக்கும்.

உங்களது சொந்தத் தேவைகளையும் மற்றவர்களின் தேவைகளையும் புரிந்துகொண்டு ஒப்புரவுக்கான வழிவகைகளை ஏற்படுத்திக் கொடுப்பதே வன்முறையற்ற தொடர்பாடலின் வழிமுறையாகவுள்ளது.

இதனைச் சரிவர இனங்கண்டு அதன்படி பணியாற்றுவோமாகில் நல்லிணக்கம் என்பது சவாலாக இருக்காது. நல்லிணக்கத்தையும் வன்முறையற்ற தொடர்பாடலையும் வாழ்வின் வழிமுறையாகக் கடைப்பிடிக்க வேண்டும்.

எங்களை அழிக்க ஆயத்தமாகின்றார்கள் என்று இலங்கையில் வாழும் எந்த சமூகமாவது நினைக்குமளவுக்கு நாட்டு நடப்புகள் செல்லுமாக இருந்தால் அது நல்ல சகுனமல்ல.

போருக்குப் பிந்தைய சூழலில் வெவ்வேறு சமூகங்களுக்கிடையிலான உறவு வெகு தொலைவில் உள்ளது. ஒரு பூங்கொத்தில் பல மலர்கள் அழகுற ஜொலிப்பதைப் போல, திருப்திகரமான இன அடையாளம் இன்றியமையாததாக இருக்கும். ஆனாலும், வேற்றுமையில் அல்லது பல்வகையில் ஆக்கபூர்வத்தையும் அழகையும் கண்டு ரசிக்கும் சிறந்த பக்குவம் இலங்கையர்களுக்கு இன்னும் வரவில்லை என்பது சங்கடத்தைத் தருகிறது.

இன அடையாளத்துக்காக கடும் போக்கைக் கடைப்பிடிப்பதும் கஸ்டங்களை ஏற்படுத்தலாம்.

உண்மையில் இன அடையாளங்கள் கிட்டத்தட்ட அரசியல் செயல்முறையாகிவிட்டன. அது மேலும் பிரிவுகளை ஏற்படுத்தும். சிறுபான்மை இனத்தவராகிய தமிழ் பேசுவோர் இவ்வாறான சூழல்களினால் பாரிய இன்னல்களை எதிர்நோக்குகின்றோம்.

போருக்கு முந்திய, பிந்தைய இலங்கையில் சமூகங்கள் மத்தியில் அவநம்பிக்கைதான் வளர்க்கப்பட்டு வந்திருக்கிறது. இந்த நிலைமை மோசமானது. இலங்கையர்களாகிய நாம் மதவெறி வன்முறையால் மேலும் பிளவுபட்டுள்ளோம்.

தவறான புரிதல்களால் தவறான விளக்கங்கள்; தவறான கருத்துகள் மற்றும் தவறான தகவல்கள் பரப்பப்படுகின்றன.

நல்லிணக்கச் செயல்பாட்டில், மனக் காயங்களைக் குணப்படுத்துதல் சமூகங்களுக்கிடையில் பாலங்களைக் கட்டுவதற்கு பெரும் ஆற்றலைக் கொண்டுள்ளன.

மதவெறி, வன்முறை, தீவிரவாதம், பிரிவினைவாதம் என்பவை நம்மிடமிருந்து அகற்றப்பட வேண்டும். அது நீண்ட காலச் செயற்பாடு. இனவாதம், மதவாதம், மொழிவாதம், பால்நிலை வேறுபாடு ஆகிய வலுவில்லாத வக்கிரங்களை வைத்துக் கொண்டு நாம் அஞ்சி, ஒடுங்கி, அமைதியிழந்து வாழ்கின்றோம்.

உடலும் உள்ளமும் சோர்ந்து போகாமல் மட்டக்களப்பில் சிறு குழுவினர் சுமார் 25 நாள்களாக தமது கவன ஈர்ப்பைச் செய்து வருவதும் “இனிமேலும் முடியும் வரை நடப்போம்” என அவர்கள் கூறுவதும், மாற்றம் ஒன்றே மாறாதது என்ற யதார்த்தத்தை மீளுறுதி செய்கிறது. ஏதோவொரு மாற்றம் எப்போதாகிலும் நடக்கலாம்; நம்பிக்கைதான் வாழ்க்கை.

திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரியின்

# 125 ஆவது ஆண்டு விழா

அ. அச்சுதன்



திருகோணமலை மாவட்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் இராமகிருஷ்ண மிஷன் ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி, இலங்கையிலுள்ள புகழ் பூத்த பாடசாலைகளில் ஒன்றாகும். வெற்றிகரமான ஒரு கல்வி நிறுவனமாக மிளிர்ந்து கொண்டிருக்கும் இக்கல்லூரி, சமூகம் கொண்டிருக்கும் கல்வி தொடர்பான எதிர்பார்ப்புகளையும் அபிலாஷைகளையும் நிறைவேற்றுகின்ற பணியை, செவ்வையாக ஆற்றி வருகிறது.

வெற்றிகரமான ஒரு கல்வி நிறுவனம், வெறுமனே கல்வியை வழங்கும் நிலையமாக மாத்திரம் இருக்காது. தான் இயங்குகின்ற சமூகத்தினுடைய ஆளுமை, ஆற்றல், மேம்பாடு என்பவற்றின் அடையாளமாக அந்நிறுவனம் திகழும். அத்துடன் மொழி, சமயம், கலை, பண்பாடு, மரபுகள் என்பவற்றின் வளர்ச்சிக்கும் பேணுகைக்கும் பெரும் பங்காற்றுவதாகவும் இருக்கும்.

அத்தகைய அடையாளங்களுடனும் சமூகபப்பங்களிப்புடனும் வரலாற்றில் இன்று 125 ஆண்டுகளை எட்டி, திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி இன்று சிறப்பாக இயங்கிக் கொண்டிருக்கின்றது.

இக் கல்லூரியின் 125 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு, 01-06-2022 அன்று அஞ்சல் திணைக்களத்தால் ரூபா 15 /- பெறுமதியான முத்திரை, கல்லூரியில் வெளியீட்டு வைக்கப்பட்டது . அத்துடன், 125 ஆவது ஆண்டு விழாவை சிறப்பிக்கும் முகமாக, 40 செயற்றிட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. .

### தோற்றம் – ஆரம்ப காலம்

கோணேஸ்வரா இந்துக் கல்லூரி, 1897ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதாக சான்றுகள் பகருகின்றன. திருகோணமலை நகரில் வாழ்ந்த சில இந்துப் பெரியார்களால் சிறிய பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்டது.

1922ஆம் ஆண்டில், ஓர் ஆரம்பப் பாடசாலையாக உத்தியோக பூர்வமாக அரசாங்கத்தால் பதிவு செய்யப்பட்டது. இந்துப் பெரியார்களைக் கொண்ட ஓர் இயக்குநர் சபையால் இப்பாடசாலை நிர்வகிக்கப்பட்டு வந்தது. ஆரம்ப காலத்தில், இந்து ஆண்கள் தமிழ்ப் பாடசாலை , இந்து ஆண்கள் ஆங்கிலப் பாடசாலை என இரு பிரிவுகளாக ஒரே நிர்வாகத்தின் கீழ் இயங்கிக் கொண்டிருந்தது. சுவாமி விபுலானந்தர் 1925இல் இப்பாடசாலையைப் பொறுப்பேற்பதற்கு முன்னதாகவே ஆங்கில மொழிக் கல்வி இப்பாடசாலையிலிருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

1924ஆம் ஆண்டில் சுவாமி விபுலானந்தர், இந்தியாவிலிருந்து மீண்டதன் பின்னர், முதன் முதலில் தனது கல்விப் பணியை ஆரம்பித்தது திருக்கோணமலை இந்துக் கல்லூரியில் தான் என்பது வரலாற்று பதிவாகும் .

1925ஆம் ஆண்டில், சி. வல்லிபுரம்பிள்ளை முதலியார் தலைமையில் இருந்த முகாமையாளர் சபை, பாடசாலையை இராமகிருஷ்ண மிஷனுக்குக் கையளிப்பதற்கு முடிவு செய்ததை அடுத்து, சுவாமி விபுலானந்தர் பாடசாலையின் நிர்வாகத்தைப் பொறுப்பேற்றார். சுவாமி பாடசாலைக் கையேற்ற திகதி 01.06.1925 ஆகும். கல்லூரியைப் பொறுப்பேற்றதிலிருந்து முகாமையாளராகக் கடமையாற்றினார்.

பின்னர், 1928இல் அதிபர் பதவியையும் ஏற்றுக் கொண்டார். 1930ஆம் ஆண்டு ஜுலை மாதம் வரை அதிபராகக் கடமையாற்றி, அப் பதவியை பி. இராமச்சந்திராவிடம் கையளித்துச் சென்றார்.

கால ஓட்டத்தில் இந்து ஆண்கள் ஆங்கிலப் பாடசாலை, இந்துக்கல்லூரி என்ற பெயரோடு மாவட்டத்தின் முன்னணிக் கல்லூரியாக வளர்ச்சி பெற்று வந்தது. இந்து ஆண்கள் தமிழ்ப் பாடசாலை, கோணேஸ்வரா வித்தியாலயம் என்ற பெயரோடு ஆரம்ப, இடைநிலைக் கல்விக்கு மாவட்டத்தின் சிறந்த பாடசாலையாக உருவாகி வந்தது.









1950ஆம் ஆண்டில் பி. ரகுபதியும் 1954ஆம் ஆண்டில் எஸ். அம்பலவாணரும் கல்லூரியின் அதிபர் பதவியை ஏற்றுக் கொண்டனர்.

1962ஆம் ஆண்டில் அதிபராக க.சிவபாலன் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். 1964 மார்கழி மாதம் கடும் சூறாவளியால் திருகோணமலை நகரம் மோசமாகப் பாதிக்கப்பட்ட போது, அதிபர் க.சிவபாலன் தலைமையில் கல்லூரியின் மாணவர்கள் பாரிய சிரமதானப் பணியில் ஈடுபட்டு, நகரத்தை சுத்தம் செய்தமை பலரது பாராட்டையும் பெற்றது என பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்துக் கல்லூரியின் முதலாவது பல்கலைக்கழக மாணவனாக கலைப்பிரிவுக்கு கோபாலசிங்கம் 1964 இல் தெரிவு செய்யப்பட்டார்.

1969இல், எஸ். இளையதம்பி அதிபராக பொறுப்பேற்றார். 1971ஆம் ஆண்டின் தொடக்கத்தில் ஆர். கிருஸ்ணபிள்ளையும் இறுதிப்பகுதியில் ஏ. நடராஜாயும் அதிபராகப் பொறுப்பேற்றனர்.

1978ஆம் ஆண்டில் கோணேஸ்வரா வித்தியாலய மாணவர்கள் முதன் முதலாக க.பொ.த (சா/த) பரீட்சைக்குத் தோற்றினர். 1978 இல் அ. சிவலோகநாதன் அதிபராகப் பொறுப்பேற்றார். 1982 இல் புதிய விஞ்ஞான ஆய்வு கூடங்களும், மாடிக் கட்டடங்களும் (விபுலானந்தர் அகம், விவேகானந்தர் அகம், சிவானந்தர் அகம்) திறந்து வைக்கப்பட்டதுடன் ‘உள்ளக்கமலம்’ என்ற கல்லூரியின் சஞ்சிகையும் வெளியிப்பட்டது.

1990 இல் பிரதி அதிபராக கடமையாற்றிய சி.தண்டாயுதபாணி அதிபராகப் பொறுப்பேற்றுக் கொண்டார். அதிபராகக் கடமையாற்றிய திரு.ச.குணரட்ணம் அவர்கள் மாகாணக் கல்வித்திணைக்களத்திற்கு கல்வி அதிகாரியாக உயர்வு பெற்றுச் சென்றார். பல வருடங்களாக இயங்காதிருந்த பழைய மாணவர் சங்கம் 1991,ல் மறுசீரமைக்கப்பட்டு வைத்திய கலாநிதி கு.ஹேமச்சந்திராவின் தலைமையில் இயங்கத் தொடங்கியது. அன்றிலிருந்து கல்லூரியின் அபிவிருத்தியில் பிரிக்க முடியாத ஒரு துணை உறுப்பாக பழைய மாணவர் சங்கம் காத்திரமான பங்களிப்பை வழங்கிக் கொண்டிருக்கின்றது.

இந்துக் கல்லூரியில் ஆரம்பப் பிரிவைத் தொடங்குவதற்காக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, 1992 இல் தரம் 1 தொடக்கம் 5 வரை வகுப்புகள் ஒரே தடவையில் ஆரம்பிக்கப்பட்டன.

இந்துக் கல்லூரியும் ஸ்ரீ கோணேஸ்வரா வித்தியாலயமும் இணைக்கப்பட்டு தேசிய பாடசாலையாக ஆக்கப்படும் வரையில் ஸ்ரீ கோணேஸ்வரா வித்தியாலயத்தில் சு.கு. குமாரசுவாமி ஐயர், பண்டிதர் இ.வடிவேலு, க. நடராசா, க. வேலுப்பிள்ளை, ச. சிவபிரகாசம், க. ஜீவரெத்தினம் ஆகிய அதிபர்கள் மிகச் சிறப்பான முறையில் கடமையாற்றியுள்ளார்கள்.

### தேசிய பாடசாலைக் காலம் (1993 – இன்று வரை)

இந்துக் கல்லூரியும் ஸ்ரீ கோணேஸ்வரா வித்தியாலயமும் 1993ஆம் ஆண்டில் ஒரே பாடசாலையாக இராமகிருஷ்ண சங்க ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி என்ற பெயரில் தேசிய பாடசாலை என்ற அந்தஸ்தையும் பெற்று இணைந்து கொண்டன. திருகோணமலை மாவட்டத்தைப் பொறுத்தவரை முதலாவதாகவும், கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை இரண்டாவதாகவும் தேசிய பாடசாலையாகிய பெருமை இக்கல்லூரிக்கு உண்டு. தேசிய ரீதியாக தேசிய பாடசாலை வரிசையில் 40 இடத்தில் இப்பாடசாலை உள்ளது.

1990ஆம் ஆண்டிலிருந்து 2004ஆம் ஆண்டு வரை. சி.தண்டாயுதபாணி இக்கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றியுள்ளார். மிக நீண்டகாலம் இக்கல்லூரியில் அதிபராகப் பணிபுரிந்தவராக இவர் திகழ்கின்றார்.

இவரது காலத்தில் நவீன கல்விப்போக்குகளுக்கும் மாற்றங்களுக்கும் ஈடுகொடுக்கக் கூடியதாக இக்கல்லூரியின் முகாமைத்துவக் கட்டொழுங்கு மாற்றப்பட்டது.

பொதுப்பரீட்சைகளின் பெறுபேறுகளில் மாவட்ட, மாகாண நிலைகளில் கல்லூரி முன்னணி நிலையைத் தொடர்ந்து பெற்றுக் கொள்கின்றது. தேசிய மட்டத்திலும் முதன்மை நிலைகளைப் பெற்றுக் கொள்கின்றது. பல்கலைகழகத்துக்கு அனுமதி பெறுவோர் தொகை அதிகரித்துச் செல்கின்றது. பொறியியல், மருத்துவம் உள்ளிட்ட பல்வேறு துறைகளிலும் மாவட்டத்துக்குரிய அனுமதிப் பங்கின் பெரும் பகுதியை இக்கல்லூரி மாணவர்களே பெற்றுக் கொள்கின்றனர்.

மாணவர்களது ஆன்மீக விருத்தியில் இக்கல்லூரி அக்கறை செலுத்துகின்றது. இந்து சமய கலாசார நடைமுறைகளில் மாணவர்களைப் பக்குவப்படுத்தும் நோக்கமாக 1997ஆம் ஆண்டில் கல்லூரியில் அழகான சித்தி விநாயகர் கோவில் கட்டப்பட்டது. இக்கோவிலில் நாளாந்த பூஜை, விசேட பூஜைகள் கிரமமாக நடைபெறுகின்றன. கல்லூரியின் இந்து மாணவர் மன்றம் ‘சாரதை’ என்ற சஞ்சிகையை வருடாந்தம் வெளியிடுகின்றது.

இக்கல்லூரி அடிப்படையில் ஓர் இந்துப் பாடசாலையாக விளங்கினாலும், இங்கு கல்வி பயிலும் ஏனைய சமயத்தைச் சேர்ந்த மாணவர்களது சமய அனுட்டானங்களுக்கும் இடமளித்து சகலரையும் அரவணைத்துச் செல்கின்றது.

2013ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் அதிபர் இ.புவனேந்திரன் ஓய்வு பெற்றுச் சென்றதன் பின்பு, தற்போது வரையில் செ. பத்மசீலன் அதிபராகக் கடமையாற்றிக் கொண்டிருக்கின்றார். இவரின் நிர்வாகத்தின் கீழ் தொடர்ந்தும் கல்லூரி தனது பன்முகப் பரிமாணத்தை விரிவாக்கிச் செல்வதைக் காணமுடிகின்றது.

இன்று இக்கல்லூரி 2,150ற்கு மேற்பட்ட மாணவர்களையும் 96 ஆசிரியர்களையும் 13 கல்விசாரா ஊழியர்களையும் கொண்டு விளங்குகின்றது. இணைக்கல்விச் செயற்பாடுகளிலும் மாணவர்கள் பல வெற்றிகளைப் பெறுகின்றனர். இக்கல்லூரியின் மாணவர்கள் உயர்ந்த சீலமும் நன்னெறியும் கொண்டவர்களாக வளர்க்கப்படுகின்றார்கள்.



வ. சக்திவேல்
shagthivel@gmail.com

# ‘ஊடகர் ஜீ.நடேசன் நினைவலைகள்’

## கட்டுரைத் தொகுப்பு நூல் வெளியீடு




மட்டக்களப்பில் வைத்து 2004 ஆண்டு சுட்டுப்படுகொலை செய்யப்பட்ட சிரேஷ்ட ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசனின் 18ஆவது ஞாபகார்த்த தினம் 2022.05.31 ஆம் திகதி நினைவு கூரப்பட்டது. இதனை முன்னிட்டு, ‘ஊடகர் ஜீ. நடேசன் நினைவலைகள்’ கட்டுரைத் தொகுப்பு நூல் வெளியீடும் ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசனின் 18ஆவது ஞாபகார்த்த நிகழ்வும் ஞாயிற்றுக்கிழமை (29.05) நடைபெற்றன.

கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் இ. தேவஅதிரன் தலைமையில் மட்டக்களப்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற குறித்த நிகழ்வில், படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளரின் திருவுருவப் படத்துக்கு வீரகேசரி பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியர் வீ. தேவராஜ், கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் அருட்பணி நவரெட்ணம் நவாஜி அடிகளார் ஆகியோர் இணைந்து மலர் மாலை அணிவித்தனர். பின்னர் 18 நினைவுச் சுடர்கள் ஏற்றப்பட்டன. தொடர்ந்து மலரஞ்சலி செலுத்தப்பட்டு, மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியமும், சிவராம் ஞாபகார்த்த மன்றமும் (சுவிஸ்) இணைந்து வெளியிட்ட ‘ஊடகர் ஜீ. நடேசன் நினைவலைகள்’ கட்டுரைத் தொகுப்பு நூல் வெளியீடும் நடைபெற்றது.

நிகழ்வின் வரவேற்புரையை கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றிய உபதலைவர் க.ஜெகதீஸ்வரனும், தலைமையுரையை கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஆலோசகரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான இ. பாக்கியராஜா நிகழ்த்தியதுடன், நூல் வெளியீட்டுரையை கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றிய தலைவர் இ. தேவஅதிரன் நிகழ்த்தினார்.

பின்னர் கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஆலோசகரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான ஏ.எல்.எம். சலீமால் குறித்த நூல் வெளியிட்டு வைக்கப்பட்டதுடன், இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் ஆகியவற்றின் முன்னாள் தலைவரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான இரா. துரைரெத்தினம், வீரகேசரியின் முன்னாள் பிரதம ஆசிரியர் வீ. தேவராஜ், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ஊடகவியலாளருமான பா. அரியநேந்திரன் ஆகியோரால் ஊடகர் ஜீ. நடேசன் தொடர்பான சிறப்பு நினைவுப் பகர்வுகளும் இடம்பெற்றதோடு, நன்றியுரையை கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியத்தின் செயலாளர் வ. சக்திவேல் நிகழ்த்தினார்.







‘ஊடகர் ஜீ. நடேசன் நினைவலைகள்’ எனும் கட்டுரைத் தொகுப்பு நூலில் நடேசனின் நண்பர்கள், பத்திரிகையாளர்கள், நெருக்கமானவர்கள் எனப் பலரும் தமது நினைவுகளைப் பகர்ந்துள்ளனர்.

குறிப்பாக இந்நூலின் முன்னுரையை, ‘மறைந்த உனது நண்பனின் கொள்கைகளை முன்னெடுத்துச் செல்வதே அவனுக்கு நீ செலுத்தும் உண்மையான அஞ்சலி’ என்ற சுருக்கத்தின் அடிப்படையில் சுவிஸில் அமைந்துள்ள சிவராம் நினைவுப் பணிமன்றத்தின் நிறுவனரும், சிரேஷ்ட ஊடகவியலாளருமான சண். தவராஜா எழுதியுள்ளார்.

இந்த நூலின் ஒவ்வொரு பக்கமும், காலத்தின் பதிவுகளாகவே காணப்படுகின்றன. ‘நாம் தொட்ட பணிகளும் விட்ட பணிகளும், நம்மைத் தொடர்கின்றன’ என வெளியீட்டுரைப் பக்கத்தில் கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றிய தலைவர் இ. தேவஅதிரன் குறிப்பிட்டுள்ளார்.

இப்புத்தகத்தில் ‘ஊடகத் துறையில் ஓர் ஆளுமை’ எனும் தலைப்பில் ஞா. குகநாதனும் ‘மட்டக்களப்பின் வெகுஜன ஊடகத்துறையும் நடேசனின் காலமும்’ எனும் தலைப்பில் இரா. துரைரத்தினமும் ‘தமிழ்த் தேசிய பற்றாளர்’ எனுத் தலைப்பில் இ. தயாபரனும் ‘அது மகிழ்வானதொரு காலம்’ எனும் தலைப்பில் பா. அரியநேத்திரனும் ‘நடேசன் படுகொலையின் நிழற்படக் சாட்சி’ எனும் தலைப்பில் ச. சந்திரபிரகாஷும் ‘அழியா நினைவில்’ எனும் தலைப்பில் பிரசன்னா இந்திரகுமாரும் ‘மனிதனாக வாழ்ந்த செய்தியாளன்’ எனும் தலைப்பில் சீவகன் பூபாலரட்ணமும் ‘நல்லாட்சியும் உள்ளூர் சுயாட்சியுமே ஜனநாயகத்தின் முதுகெலும்பு’ எனும் தலைப்பில் அ. சுகுமாரனும் ‘தமிழ் வரலாற்றுக்குள் வாழ்ந்து வரலாறாகிப் போனவர்’ எனும் தலைப்பில் கலாநிதி. எம். பி. ரவிச்சந்திராவும் ‘நடேசன் இன்னும் வாழ்கிறான்’ எனும் தலைப்பில் ச. நவநீதனும் கட்டுரைகளை எழுதியுள்ளனர்.

மேலும் இப்புத்தகத்தில், ‘ஐ.பி.சி தமிழ் ஊடாக மக்கள் மனம் கவர்ந்த ஊடகர்’ எனும் தலைப்பில் எஸ். கே. ராஜனும் ‘ஊடகத் துறையில் தடம் பதித்த நடேசன்’ எனும் தலைப்பில் கனகரவியும் ‘தமிழ் ஊடகத் துறையினரே நாம் ஒன்றிணைந்தால் எழுவோம்; அன்றேல் வீழ்வோம்’ எனும் தலைப்பில் வி. தேவராஜும் ஊடகத் தொழில்தகுதியும் YouTube தமிழ்த் தொலைக் காட்சிகளும்’ எனும் தலைப்பில் அ. நிக்ஸனும் ‘படுகொலைக் கலாசாரத்தின் தொடர்ச்சியாய்’ எனும் தலைப்பில் சோமிதரன் சிறிதரனும் ‘உலகம் உள்ள வரை’ எனும் தலைப்பில் மானுடப்பித்தனும் ‘நடேசன் எனும் நட்பு விருட்சம்’ எனும் தலைப்பில் திருமலை நவமும் ‘நடேசன்: கொலைநதி தின்ற ஊடகத் தலைமகன்’ எனும் தலைப்பில் தெய்வீகனும் ‘ஊடகம் வாழ உயிர் கொடுத்த ஊடகவியலாளன்’ எனும் தலைப்பில் வே. தவராஜாவும் ‘நெஞ்சுரம் கொண்ட நெல்லை நடேசன்’ எனும் தலைப்பில் இ.பாக்கியராஜாவும் கட்டுரைகளை எழுதியுள்ளனர்.

‘நிறைவேறா ஆசையுடன் பறிபோன உயிர்’ எனும் தலைப்பில் கோ.கருணாகரமும் (ஜனா), ‘மானுட விடுதலைக்கான பாதையில் ஊடகங்கள்’ எனும் தலைப்பில் அகதித் தமிழனும் ‘ஒரு யுக புருசன்’ எனும் தலைப்பில் சட்டத்தரணி கந்தையா தவராஜாவும் ‘நடேசன் அண்ணை’ எனும் தலைப்பில் இலண்டன் பரா பிரபாவும் ‘எக்காலத்திலும் பூர்த்தி செய்யப்பட முடியாத வெற்றிடம்’ எனும் தலைப்பில் வி.மைக்கல் கொலினும் ‘ஊடக உலகில் ஒழியா நாமம்’ எனும் தலைப்பில் சிவம் பாக்கியநாதனும் ‘நடேசன் என்றோர் ஊடக ஆளுமை’ எனும் தலைப்பில் வி.ரி. சகாதேவராஜாவும் ‘நெஞ்சமெல்லாம் நிறைந்த நெல்லை நடேசன்’ எனும் தலைப்பில் சீ. ஜெயந்திரகுமாரும் (ஜெயா) ‘உரத்துச் சொன்ன ஊடக நண்பன் நடேசன்’ எனும் தலைப்பில் ஏ.எல்.எம். சலீமும் ‘தமிழ் ஊடகவியல் வளர்ச்சிக்கு அவசியமான தொழில் முறைப் பயிற்சியும் தேர்ச்சியும்’ எனும் தலைப்பில் கோ. றுசாங்கனும் ‘நிரப்பப்பட முடியாத வெற்றிடம்’ எனும் தலைப்பில் எல். தேவ அதிரனும் ‘தன்னை நேசித்தவனை மறந்த மண்’ எனும் தலைப்பில் சண் தவராஜாவும் இப்புத்தகத்தில் கட்டுரைகளைத் தடம் பதித்துள்ளமை சிறப்பம்சமாகும்.









இந்நூல், 2021ஆம் ஆண்டு 17ஆவது ஞாபகார்த்த தினத்தில் வெளியிடவென உத்தேசிக்கப்பட்டிருந்த போதும் கொவிட்-19 பெருந்தொற்று சூழல் காரணமாக, நூல் வெளியீடு பிற்போடப்பட்ட நிலையில் தற்போது வெளியீட்டு வைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களான கோவிந்தன் கருணாகரம், இரா. சாணக்கியன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஞா. சிறிநேசன், முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களான இ. பிரசன்னா, மா. நடராசா ஊடகவியலாளர்கள், சமூக நலன் விரும்பிகள், மதகுருமார், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் என அதிகளவிலானோர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியதுடன், சிறப்பு நூல் பிரதிகளையும் பெற்றுக்கொண்டனர்.

# லண்டனில் மலையக இலக்கிய மாநாடு 2022

## மலையகத்தின் மூத்த எழுத்தாளர் தெளிவத்தை ஜோசப்பின் வாழ்த்து

தமிழ் இலக்கியம், ஈழத்தமிழ் இலக்கியம் என்னும் பெரும் பரப்பில், மலையக இலக்கியம் என்றும் பேசப்படும் அளவுக்கு, இம்மலையக மக்கள் பற்றிய எழுத்துகள் அழுத்தமாகவும் தனித்துவமானதாகவும் தன்னை நிலைநிறுத்தி வளர்கின்றது.

மலையகம் என்ற உணர்வுடனும் மலையக மக்கள் என்னும் உறவுடனும் மேற்கிளம்பிய இவ்வெழுத்துகளின் எழுச்சிக்கும் வளர்ச்சிக்குமான வழிகாட்டிகளாக நின்றவர்கள், கைவிளக்குடன் வழித்துணையாக வந்தவர்கள் என்று அனைவரையும் இந்த மலையக இலக்கிய மாநாடு மதிக்கிறது; போற்றுகிறது; ஆய்வு செய்து அறிமுகப்படுத்தி வளரச் செய்கிறது என்பதில் பெருமகிழ்வு கொள்கிறேன்.

பெருங்கடலில் சிறு துரும்பென மலையக இலக்கியத்துடன் நானும் மிதந்துள்ளேன் என்னும் நினைவுகளுடன், இந்த மாநாட்டு ஏற்பாட்டாளர்கள் அனைவரையும் பாராட்டி வாழ்த்துவதிலும் பெருமகிழ்வு கொள்கின்றேன்.

தங்களுடைய ஆதிக்க விஸ்தரிப்புக்காகவும் பொருளாதாரா வளர்ச்சிக்காகவும் உழைப்புச் சக்தியாக-கூலிகளாகக் கூட்டிவந்த இம்மக்களின் சந்ததியினரை, ஒரு 150 ஆண்டு காலத்தின் பின்னர் அறுபதுகளின் பிற்பகுதியில் எதுவிதமான சட்டப்பாதுகாப்போ, இருத்தலுக்கான உத்தரவாதமோ இல்லாமல் அநாதரவாக விட்டு ஓடிப்போன வெள்ளைக்காரர்களின் தேசத்துத் தலைநகர் லண்டனில் இம்மாநாடு நடைபெறுகிறது என்பது மகிழ்வைத்தருகிறது.



தெளிவத்தை ஜோசப்



மு. நித்தியானந்தன்



எச்.எச். விக்ரமசிங்க

இந்த மக்களைப் போலவே இந்த மக்கள் பற்றிய எழுத்துகளும் இலக்கியமும் பெரும் அலைக்கழிப்புக்கும் அசட்டைகளுக்கும் அதிகார இலக்கிய அடக்குதல்களுக்கும் உள்ளாகிக்கிடந்த சூழலில், மலையக இலக்கியம் பற்றிய அறிமுகத்தையும் அதன் மீதான ஆர்வத்தையும் அது பற்றிய தேடல்களையும் ஐரோப்பிய நாடுகளில் ஏற்படுத்திய பதுளை மு. நித்தியானந்தனின் செயற்பாடுகள் மிகப்பெரியவை; சாதனை மிக்கவை!

யாழ். வைகறையூடாகத் தொடங்கிய மலையக இலக்கியப்பணிகளின் தொடர் செயற்பாடுகள் இவை. நித்தியுடன் வைகறையில் இணைந்து, லண்டன்வரை உடனிருந்து இயங்கும் ஓவியர் கே.கே.ராஜாவும் நன்றிக்குரியவரே.

மு.நித்தியானந்தனும் எச்.எச். விக்ரமசிங்கவும் தொகுத்து வழங்கும் ‘சி.வி.யின் மலையக அரசியல் தலைவர்கள்’ என்னும் நூல் இந்த மாநாட்டில் வெளியிடப்படுகிறது என்பதும் மகிழ்வைத் தருகின்றது.



சி.வி. வேலுப்பிள்ளை

மறைந்த மலையக எழுத்தாளுமைகளின் அரங்குகள், நூல் வெளியீடு, இருபதுக்கும் மேற்பட்ட மலையக நூல்கள் பற்றிய ஆய்வுகள், விமர்சனங்கள் என மலையக இலக்கிய மாநாடு கலகலக்கப்போகிறது என்னும் நினைவே இம்மாநாட்டு ஏற்பாட்டாளர்கள் அனைவருக்கும் வாழ்த்துக்கூறி அடிதொழ விழைகிறது.




### கொக்குவிலில்

# தெணியானுக்கான அஞ்சலி

அண்மையில் காலமாகிய, சமூக ஒடுக்குமுறைகளை எதிர்ப்பதில் முன்நின்ற முற்போக்கு எழுத்தாளரும் ஈழத்தின் புகழ்பெற்ற எழுத்தாளுமைகளுள் குறிப்பிடத்தக்கவருமான தெணியானுக்கான அஞ்சலி நிகழ்வு, நாளை ஞாயிற்றுக்கிழமை (05) மாலை நான்கு மணியளவில் கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. எழுத்தாளர் மு. அநாதரட்சகன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், எழுத்தாளர் க. தணிகாசலம், கலாநிதி சு. குணேஸ்வரன், யாழ். பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் இ. இராஜேஸ்கண்ணன், கலாநிதி ந. இரவீந்திரன், சட்டத்தரணி சோ. தேவராஜா, ஐ. சாந்தன், பொதுவுடமைச் செயற்பாட்டாளர் சி.கா. செந்திவேல் ஆகியோர் உரையாற்றவுள்ளனர். ஆர்வமுள்ளவர்களை இவ் அஞ்சலி நிகழ்வில் இணைந்துகொள்ளுமாறு, தேசிய கலை இலக்கியப் பேரவையினர் அழைப்புவிடுக்கின்றனர்.

–சபா தனுஜன்

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டால் சனிக்கிழமை, 04 ஜூன் 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.